# தின பூமி

thinaboomi.com

மதுரை, வியாழன், ஏப்ரல் 24, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**புனித பீட்டர் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி**

...2-ம் பக்கம்

**பஹல்காம் தாக்குதலை கண்டித்து 35 ஆண்டுகளுக்கு பிறகு காஷ்மீரில் முழு அடைப்பு**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். கிரிக்கெட்டில் விரைவாக 5,000 ரன்கள்: கே.எல்.ராகுல் சாதனை**

...6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று சட்டமன்ற பேரவையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### காஷ்மீர், பஹல்காம் தாக்குதலுக்கு கடும் கண்டனம்:

# தீவிரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும்

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

## மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு துணை நிற்பதாகவும் உறுதி

சென்னை, ஏப். 24-

**தமிழக சட்டப்பேரவையில் நேற்று, காஷ்மீர், பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், தீவிரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், இது தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு துணை நிற்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

### கடும் கண்டனம்...

தமிழக சட்டப்பேரவையில் நேற்று (ஏப்.23) பஹல்காம் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது நேற்று (நேற்று முன்தினம்) நடத்தப்பட்டுள்ள மனிதாபிமானமற்ற, பயங்கரவாத தாக்குதலுக்குக் கடும் கண்டனத்தையும், அதில் உயிரிழந்த அனைவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் இப்பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கடும் அதிர்ச்சி, துயரம்

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் உள்ள சுற்றுலா தலத்தில் பயங்கரவாதிகள் மிகக் கொடூரமான ஒரு தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். இதில் இதுவரை 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்ட தகவல் நமக்கெல்லாம் கடும் அதிர்ச்சியையும் துயரத்தையும் அளித்துள்ளது. காஷ்மீர் மாநிலத்தின் மிகப் பிரபலமான சுற்றுலாத்தலமான பஹல்காமுக்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து மட்டுமல்ல; உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள்.

### கொடூரமான தாக்குதல்

அங்கு பைசாரன் என்ற மலைப்பகுதியில் இருந்து திடீரென நுழைந்த தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது இரக்கமற்ற வகையில் கொடூரமான தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள். அப்பாவி மக்கள் மீது நடத்தப்படும் இதுபோன்ற பயங்கரவாத தாக்குதல் கடுமையாக கண்டிக்கத்தக்கதாகும். சமீபத்திய ஆண்டுகளில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் என்று அம்மாநில முதல்ர் உமர் அப்துல்லா குறிப்பிட்டுள்ளார்.

### இரும்புக்கரம் கொண்டு

இந்தத் தாக்குதலுக்கு பயங்கரவாத அமைப்பு ஒன்று பொறுப்பேற்றுள்ளது. அங்கு எத்தகைய மோசமான, கொடூரமான, பயங்கரமான சூழல் நிலவுகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு ஆகும். பயங்கரவாத - தீவிரவாத அமைப்புகள் எத்தகைய எண்ணம் கொண்டவையாக இருந்தாலும் அவற்றை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க வேண்டும். இந்தத் தாக்குதலில் இதுவரை மொத்தம் 26 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

### தமிழர்கள் பாதிப்பு...

இந்தத் தாக்குதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலரும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்ற தகவல் எனக்குக் கிடைத்தவுடன் உடனடியாக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் செயல்படும் சிறப்பு உதவி மையம் தொடங்குவதற்கு உத்தரவிட்டேன். இச்சம்பவம் குறித்து பொது மக்கள் தொடர்பு கொண்டு விவரங்கள் அறிய உதவி மையம் தொடங்கப்பட்டு, 011-24193300, 9289516712 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### உரிய உதவிகளை...

மேலும், டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையரை இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து செயல்பட உத்தரவிட்டேன். காஷ்மீர் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றி, இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உரிய உதவியைச் செய்யுமாறு உத்தரவிட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் பணியாற்றி வரும் கூடுதல் ஆட்சியரும் ஐ.ஏ.எஸ் அதிகாரியுமான அப்தாப் ரசூலை நேரடியாக ஜம்மு காஷ்மீர் அனந்தநாக் மாவட்டம் பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை

(கடைசி பக்கம் பார்க்க)

### பஹல்காம் பயங்கரவாத தாக்குதல்:

# காஷ்மீருக்கு சுற்றுலா சென்ற 68 தமிழர்கள் பத்திரமாக மீட்பு

சென்னை, ஏப். 24-

**பயங்கரவாத தாக்குதல் சம்பவம் நடந்த பஹல்காம் பகுதிக்கு சுற்றுலா சென்ற 68 தமிழர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

தமிழ்நாடு மோட்டார் வாகன உதிரிபாக வியாபாரிகள் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் இருந்து 25 பெண்கள் உட்பட 68 பேர் மதுரையில் இருந்து ஜம்மு காஷ்மீருக்கு கடந்த சனிக்கிழமை 5 நாட்கள் சுற்றுலா பயணமாக சென்றிருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பெஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.26 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், மதுரையில் இருந்து ஜம்மு காஷ்மீருக்கு சுற்றுலா சென்றவர்கள் எந்த வித பாதிப்பும் இன்றி பத்திரமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்கள் நாளை (வெள்ளிக்கிழமை) மதுரை திரும்ப உள்ளனர்.

இதுகுறித்து மதுரையில் உள்ள தமிழ்நாடு மோட்டார் வாகன உதிரிபாக வியாபாரிகள் சங்க துணைதலைவர் கூறியதாவது:-

மதுரையை சேர்ந்த 30 பேர் சென்றுள்ள நிலையில் 68 பேரும் பாதுகாப்புடன் உள்ளதாகவும் இன்றைய தினம் ஏற்கனவே திட்ட மிட்டபடி அவர்கள் சுற்றுலா தளத்தில் இருப்பதாகவும் வீடியோ கால் மூலமாக தகவல் அளித்துள்ளனர். அந்த 68 பேரும் பெஹல்காமில் தாக்குதல் நடந்த இடத்திற்கு அருகே மற்றொரு இடத்தில் இருந்ததாக தெரிவித்தனர்.

மேலும், அந்த 68 பேரில் ஒருவருக்கு இருதய நோய் ஏற்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் சிகிச்சையில் உள்ளார். தாக்குதல் நடந்தது குறித்து சுற்றுலா சென்ற அவர்களுக்கு எதுவும் தெரியாத நிலையில் நாங்கள் தான் இங்கிருந்து அவர்களுக்கு தகவல் அளித்தோம். 68 பேரும் விமானம் மூலமாக தமிழகத்திற்கு திரும்பவுள்ளனர். தற்போது அனைவரும் பாதுகாப்புடன் உள்ளனர். அங்கு கடையடைப்பு போராட்டம் நடந்தாலும் இயல்பான நிலை உள்ளதாக சுற்றுலா பயணிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

### பஹல்காம் தீவிரவாதிகள் தாக்குதலில்

# பலியானவர்களின் உடல்களுக்கு மத்திய அமைச்சர் அமித்ஷா அஞ்சலி



ஸ்ரீநகர், ஏப்.24-

**பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நேற்று முன்தினம் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். சுற்றுலா சென்றவர்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு முன்பாக அவர்களின் மதம் குறித்து கேட்டு பின்னர் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். குஜராத், கர்நாடகா உள்பட பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உலக நாடுகளின் தலைவர்கள் தொடங்கி பொதுமக்கள் வரை அனைவரும் இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த தாக்குதலை அடுத்து உள்துறை அமைச்சர் அமித்ஷா முன்தினமே ஸ்ரீநகர் விரைந்தார். ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, சி.ஆர்.பி.எப். டி.ஜி, ஜம்மு காஷ்மீர் டிஜி, ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

உயிரிழந்த 26 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு ஸ்ரீநகரில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களுக்கு அமித்ஷா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதையடுத்து, அங்கு கூடி இருந்த உயிரிழந்தவர்களின் உறவினர்களை அமித்ஷா சந்தித்தார். அவர்கள் கதறி அழுதபடி அமித்ஷாவிடம் முறையிட்டனர். அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்த அமித்ஷா, இந்த கொடூரமான செயலில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவார்கள் என்றும் யாரும் தப்பிக்க முடியாது என்றும் கூறினார்.

துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால், ஜம்மு காஷ்மீர் பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவர் தாரிக் ஹமீத் உள்ளிட்டோரும் உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

# பஹல்காம் தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுப்போம்

## அமைச்சர் ராஜ்நாத் சிங் உறுதி

புதுடெல்லி, ஏப்.24-

**பயங்கரவாதத்தை இந்தியா சகித்துக்கொள்ளாது என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்**

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை குறிவைத்து திடீர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதல் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து முப்படைகளில் தலைமை தளபதி அனில் சவுகான், ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை தளபதிகள் ஆகியோருடன் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்திற்கு பிறகு ராஜ்நாத் சிங் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-

பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் உறுதிப்பாட்டை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். பயங்கரவாதத்தை இந்தியா சகித்துக் கொள்ளாது. அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என நாட்டு மக்களுக்கு நான் உறுதியளிக்கிறேன். இந்த பயங்கரவாத தாக்குதலை நிகழ்த்தியவர்கள் மட்டுமின்றி, தாக்குதலுக்கு பின்னணியில் இருந்து செயல்பட்டவர்களும் தண்டிக்கப்படுவார்கள். குற்றவாளிக்கு விரைவில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லாவில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஏப்.24-


**ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டில் (எல்ஓசி) ஊடுருவல் முயற்சியை இந்திய ராணுவம் முறியடித்தது. இதில், 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.**

இது தொடர்பாக சினார் படைப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், "எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைக் கடக்க 2–3 அடையாளம் தெரியாத பயங்கரவாதிகள் முயன்றதை அறிந்த துருப்புக்கள், அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். பதிலுக்கு ஊடுருவல்காரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதன் காரணமாக கடுமையான துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில், இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து

(கடைசி பக்கம் பார்க்க)





## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 520.90 | 161.70 |
| பாயின்ட் 80,116.46 | பாயின்ட் 24,328.95 |



**தங்கம்**
1 சவரன் ₹72,120
1 கிராம் ₹9,015



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.36

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

### புனித பீட்டர் தேவாலயத்தில்
# போப் பிரான்சிஸ் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி



**ரோம், ஏப். 24-**

போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். புனித பீட்டர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் உடலுக்கு பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர், போப் ஆண்டவர்(வயது 88). கத்தோலிக்க திருச்சபையின் இந்த உச்சபட்ச பதவியில் போப் பிரான்சிஸ் இருந்து வந்தார். அர்ஜென்டினாவை சேர்ந்த இவர் கடந்த 2013-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதி போப் ஆண்டவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

12 ஆண்டுகளாக இந்த பதவியில் இருந்த அவருக்கு முதுமை காரணமாக கடந்த சில மாதங்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டிருந்தது. பின்னர் சுவாசக்கோளாறு காரணமாக கடந்த பிப்ரவரி 14-ம் தேதி இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள ஜெமெல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு நடந்த பரிசோதனையில் நிமோனியா பாதிப்பு இருந்தது தெரியவந்தது. இதற்காக தீவிர சிகிச்சை பெற்ற அவர் 38 நாட்களுக்குப்பின் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். வாடிகனில் சமீபத்தில் நடந்த புனித வியாழன், புனித வெள்ளி பிரார்த்தனைகளிலும் போப் பிரான்சிஸ் பங்கேற்றார்.

இந்த நிலையில் போப் பிரான்சிஸ் கடந்த 21-ம் தேதி காலமானார். வயது முதிர்வு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்தார். போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவரின் இறுதிச்சடங்கு 26-ம் தேதி (சனிக்கிழமை) நடைபெற உள்ளது. இறுதிச்சடங்கிற்கு முன் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக போப் பிரான்சிஸ் உடல் ரோம் நகரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

# போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்கிறார் டொனால்டு டிரம்ப்

**வாஷிங்டன், ஏப். 24-**

போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் பங்கேற்க ரோம் செல்கிறார் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது 88) கடந்த 21ம் தேதி காலமானார். வயது முதிர்வு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக அவர் உயிரிழந்தார். போப் பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். அவரின் இறுதிச்சடங்கு 26-ம் தேதி நடைபெற உள்ளது.

இத்தாலியின் ரோம் நகரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் போப் பிரான்சிஸ் உடல் வைக்கப்பட்டு இறுதிச்சடங்கு நடைபெறுகிறது. அதன்பின்னர், உலக நாடுகள் தலைவர்கள், பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கபட்டு புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் அடக்கம் செய்யப்படுகிறது.

இந்நிலையில், போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பங்கேற்கிறார். இதற்காக அவர் வெள்ளிக்கிழமை காலை தனிவிமானம் மூலம் இத்தாலியின் ரோம் நகருக்கு செல்கிறார்.

அதன்பின்னர், சனிக்கிழமை நடைபெற உள்ள போப் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் டொனால்டு டிரம்ப் பங்கேற்கிறார். இறுதிச்சடங்கிற்குப்பின் சனிக்கிழமை மாலை அவர் அமெரிக்கா திரும்புகிறார்.

### இந்தியாவுக்கு உறுதுணையாக இருப்போம்:
# காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் கடும் கண்டனம்

**ஜெருசலேம், ஏப். 24-**

காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு இஸ்ரேல் உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் நகரின் பைசாரன் மலைப்பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். மினி சுவிட்சர்லாந்து என்று அழைக்கப்படும் அப்பகுதியில் நடந்த இந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்படும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலில் பலர் கொல்லப்பட்டிருப்பது, காயமடைந்திருப்பது எனக்கு மிகவும் வருத்தமளிக்கிறது. இந்த தாக்குதலில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக்கொள்கிறோம். பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு இஸ்ரேல் உறுதுணையாக இருக்கும்' என தெரிவித்துள்ளார்.

# காஷ்மீர் தாக்குதலில் தொடர்பா? பாகிஸ்தான் அமைச்சர் மறுப்பு

**இஸ்லாமாபாத், ஏப். 24-**

காஷ்மீர் தாக்குதலுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை என்று பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ளார். மேலும், பாகிஸ்தான் எந்த சூழலிலும் பயங்கரவாதத்தை ஆதரிக்காது என்று அவர் விளக்கம் அளித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பஹல்காமில் பயங்கரவாதிகளால் செவ்வாய்க்கிழமை 26 சுற்றுலாப் பயணிகள் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு 'லஷ்கர்-ஏ-தொய்பா' பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான 'தி ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட்' பொறுப்பேற்றுள்ளது. இந்த நிலையில், இந்தத் தீவிரவாதத் தாக்குதலுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஜா ஆசிஃப் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது: மக்கள் தங்கள் உரிமைகளை கேட்கிறார்கள். இந்துத்துவ சக்திகள் மக்களை சுரண்டி வருகின்றன. சிறுபான்மையினரை அடக்குகிறார்கள். கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் சுரண்டப்படுகிறார்கள், கொல்லப்படுகிறார்கள். அதனால்தான் இந்தியாவில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன. இந்தச் சம்பவத்தில் எங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

எந்தச் சூழலிலும் நாங்கள் எங்கும் பயங்கரவாதத்தை ஆதரிக்கவில்லை. மேலும், எந்த மோதலிலும் அப்பாவி மக்கள் இலக்காகக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். பாகிஸ்தானுக்குள் அமைதியின்மையை ஏற்படுத்த இந்தியா உடந்தையாக இருப்பதை பல சந்தர்ப்பங்களில் ஆதாரத்துடன் நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம் எனத் தெரிவித்தார்.

### இலங்கைக்கு கடத்த முயன்ற
# அலுமினிய முலாம் பூசிய 8 கிலோ தங்கம் பறிமுதல்

**கொழும்பு, ஏப். 24-**

இலங்கைக்கு கடத்த முயன்ற அலுமினிய முலாம் பூசிய 8 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் தொடர்புடைய 2 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையின் தலைமன்னார் உருமலையில் இருந்து தமிழகத்தின் ராமேஸ்வரத்திற்கு தங்கம் கடத்தப்படுவதாக இலங்கை கடற்படைக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, இந்தியா, இலங்கை இடையேயான சர்வதேச கடற்பகுதியில் இலங்கை கடற்படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, படகில் அலுமினிய முலாம் பூசி 8 கிலோ தங்கம் கடத்தி வரப்பட்டதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, படகில் தங்கத்தை கடத்தி வந்த 2 பேரை கைது செய்த கடற்படையினர் பறிமுதல் தங்கத்தை காங்கேசன் துறை சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

### 4.3 ரிக்டர் அளவில்
# குஜராத்தில் நிலநடுக்கம்

**காந்திநகர், ஏப். 24-**

குஜராத் மாநிலம் கட்சு மாவட்டத்தில் 4.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் (என்சிஎஸ்) தெரிவித்துள்ளது.

தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், கட்சு மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு 11.26 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் 20 கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 4.3 அலகுகளாக பதிவானது.

இதையொட்டி, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நில அதிர்வுகள் உணரப்பட்டன. நிலஅதிர்வுகள் காரணமாக வீடுகள் மற்றும் கட்டடங்களை விட்டு பொதுமக்கள் அச்சத்தில் வெளியேறினர். இந்த நிலஅதிர்வால் நல்வாய்ப்பாக உயிரிழப்புகள் மற்றும் பொருள் சேதம் ஏதும் ஏற்படவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளது.

### 6.0 ரிக்டர் அளவில்
# துருக்கியில் பயங்கர நிலநடுக்கம்

**அங்காரா, ஏப். 24-**

துருக்கியில் நேற்று திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. மதியம் 3.19 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 40.99 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 28.10 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கம் இஸ்தான்புல்லுக்கு அருகிலுள்ள மர்மாரா கடலில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

## 24-04-2025




**மேஷம்:-** தாய், மனைவி, சகோதரி போன்ற அன்புமிக்க பெண்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நல்ல வாகன யோகம் உண்டு. அரசுப் பணிகளில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**ரிஷபம்:-** இன்று, தன்னம்பிக்கை அதிகரிக்கும். முன்னேற்ற வாய்ப்புகள் தேடி வரும். அரசு ஆதரவும், அனைத்துக் காரியங்களும் வெற்றியில் முடியும். அறிவு விருத்தியும், புத்தி தெளிவும் ஏற்படும்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படுவதோடு, குழந்தை பாக்கியம் ஏற்படும். புகழும், கௌரவமும் ஓங்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**கடகம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. திடீர் நடுக்கம். பயம் ஏற்படும். எதிலும் நிதானமாக நடக்க வேண்டிய சந்திராஷ்டம நாள். எச்சரிக்கை தேவை. 8

**சிம்மம்:-** இன்று, பேச்சுத் திறமையால் மிகப் பெரிய காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். அரசு வழியில் அதிகாரிகள் உதவியால் ஆதாயம் அடைவார். புது புது ஆடைகள் கிடைக்கும். மனைவியால் நன்மையும் அடைவர்.

**கன்னி:-** பயணத்தில் பலவித நன்மைகள் ஏற்படும். பல வழிகளிலும் தனவரவு உண்டு. அதன் காரணமாக ஆனந்தம் பொங்கும். சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர். புதிய நட்பு கிடைக்கும்.

**துலாம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் குழந்தைகள் மீது பாசம் பெருகும்.

**விருச்சிகம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். எதிர்பார்த்த தனவரவு, இனிய தூக்கமும் குறையும்.

**தனுசு:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனவரவும், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும். வாகன சுகம் குறையும்.

**மகரம்:-** சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய நாள். படிப்பில் கவனம் இருந்தால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பணியில் அலட்சியப் போக்குகள் அல்லல் தரலாம்.

**கும்பம்:-** பெரியோர் மீது அன்பும், பாசமும் பெருகும். நல்ல புதிய வாகன யோகம் உண்டு. அரசுப் பணியில் உள்ளவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்படும் பணவரவால் மனத் திருப்தி உண்டாகும்.

**மீனம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலகத்தில், தில்லி - தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் டாக்டர் பூர்விக் புக்கிரியால், குஜராத் - தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஜடேஜா, சாய் கணேஷ், தீபக் ராஜ், தமிழ்நாடு அரசின் தடய அறிவியல் துறையின் இயக்குநர் டாக்டர் சிவப்பிரியா ஆகியோர் தமிழ்நாட்டில் தடய அறிவியல் பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பாக சந்தித்து பேசினர். இச்சந்திப்பின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு அரசின் தடய அறிவியல் துறை கூடுதல் இயக்குநர் முனிராசன், மீனாட்சி அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் ஜி.ஆர். கோகுல் மற்றும் டாக்டர் சுரேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# பஹல்காமில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டது கவலையளிக்கிறது
### பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அறிக்கை

**புதுடெல்லி, ஏப். 24-**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டது கவலை அளிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் குறித்து பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "அனந்த்நாக் மாவட்டத்தில் நடந்த தாக்குதலில் சுற்றுலா பயணிகள் உயிரிழந்தது குறித்து நாங்கள் கவலை கொண்டுள்ளோம். தங்களின் உறவினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய விரும்புகிறோம்." என்று தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் அருகே உள்ள பைசரான் புல்வெளியில் செவ்வாய்க்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டனர். இதில் பெரும்பாலானவர்கள் சுற்றுலா பயணிகள். கடந்த பல வருடங்களாக ஜம்மு காஷ்மீரில் குடிமக்கள் மீது நடத்தப்பட்ட மிகவும் மோசமான தாக்குதலில் இதுவும் ஒன்றாகும்.

லஷ்கர்-இ-தொய்பாவின் கிளை அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த தாக்குதலை அடுத்து உள்துறை அமைச்சர் அமித் ஷா உடனே ஸ்ரீநகர் விரைந்தார். ஜம்மு காஷ்மீர் துணை நிலை கவர்னர் மனோஜ் சின்ஹா, முதல்வர் உமர் அப்துல்லா, சிஆர்பிஎஃப் டிஜி, ஜம்மு காஷ்மீர் டிஜி, ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

உயிரிழந்த 26 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு ஸ்ரீநகரில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்களுக்கு அமித் ஷா மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதையடுத்து, அங்கு கூடி இருந்த உயிரிழந்தவர்களின் உறவினர்களை அமித் ஷா சந்தித்தார். அப்போது, இந்தக் கொடிய தாக்குதலை நடத்தியவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்த பாதுகாப்புபடையினர் அனைத்து முயற்சிகளையும் எடுப்பார்கள் என்று உறுதி அளித்தார்.

# ஆப்கானுக்கு தடுப்பூசிகளை அனுப்பி இந்தியா உதவி

**புதுடெல்லி, ஏப். 24-**

ஆப்கானிஸ்தான் மக்களுக்காக சுமார் 4.8 டன் அளவிலான தடுப்பூசிகளை மத்திய அரசு அனுப்பியுள்ளது.

மனிதாபிமான உதவிகளின் அடிப்படையில், ஆப்கானிஸ்தான் நாட்டு மக்களின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக இந்திய அரசின் சார்பில் 4.8 டன் அளவிலான தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ரேபிஸ், டெட்டனஸ், ஹெபாடிட்டிஸ் பி மற்றும் இன்புளூயன்சா உள்ளிட்ட நோய்களுக்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் இந்த உதவிக்காக ஆப்கானின் பொது சுகாதாரத் துறை அமைச்சகம் நன்றி தெரிவித்துள்ளது. இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், ஆப்கானின் சுகாதாரத் துறை இந்தியா அனுப்பிய தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டதாகவும், இந்த உதவியானது பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரைக் காப்பாற்றும் எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த உதவியின் மூலம் கடுமையான தாக்குதல்கள் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானின் அத்தியாவசிய மருத்துவத் தேவைகள் நிறைவேற்றப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஜனவரி மாதம் துபையில் ஆப்கானிஸ்தானின் இடைக்கால வெளியுறவுத் துறை அமைச்சரான மவ்லாவி அமீர் கான் முத்தாகியுடன் இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் ஆப்கனுக்குத் தேவையான மருத்துவப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிகளை மனிதாபிமானத்தின் அடிப்படையில் இந்தியா மேற்கொள்ளும் என உறுதியளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### சென்னை விமான நிலையம்-கிளாம்பாக்கம்
# மெட்ரோ விரிவாக்க திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்த அனுமதி

**சென்னை, ஏப். 24-**

சென்னை விமான நிலையத்தில் இருந்து கிளாம்பாக்கம் வரையிலான மெட்ரோ விரிவாக்கத் திட்டத்துக்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேலும், நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர் வழியாக கிளாம்பாக்கத்தை இணைக்கும் வகையில் மொத்தமாக 15.46 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ வழித்தடம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து மெட்ரோ ரயில் மூலம் நேரடியாக கிளாம்பாக்கம் வரை செல்லலாம்.

இந்த மெட்ரோ விரிவாக்கத்துக்கான திட்ட அறிக்கையை மெட்ரோ ரயில்வே நிர்வாகம் தமிழக அரசிடம் சமர்ப்பித்த நிலையில், ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்யவும், மத்திய அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெறுவதற்கான பணிகளை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மெட்ரோ விரிவாக்கத்துக்கான நிலத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கையகப்படுத்தும் பணியை தொடங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### பவுனுக்கு ரூ.2,200 குறைந்தது:
# தங்கம் விலை திடீர் சரிவு

**சென்னை, ஏப். 24-**

தங்கம் விலை நேற்று (ஏப்.23) பவுனுக்கு ரூ.2,200 என குறைந்து ஒரு பவுன் ரூ.72,120-க்கு விற்பனையானது. தங்கம் கிராமுக்கு ரூ.275 குறைந்து ஒரு கிராம் ரூ.9,015-க்கு விற்பனையானது.

உலக அளவில் தங்கத்துக்கு டிமாண்ட் அதிகம் உள்ளது. அதன் காரணமாக சர்வதேச பொருளாதார சூழலுக்கு ஏற்ப அதன் விலை ஏற்ற இறக்குத்துடன் இருப்பது வழக்கம். இருப்பினும் இந்தியாவில் அண்மையில் வரலாறு காணாத வகையில் புதிய விலை உச்சத்தை எட்டி இருந்தது தங்கம் விலை. இந்த நிலையில் நேற்று (ஏப்.23) தங்கம் விலை குறைந்து விற்பனையானது.

நேற்று (ஏப்.23) சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கம் பவுனுக்கு ரூ.2,200 குறைந்து விற்பனையானது. ஒரு கிராம் ரூ.275 என விலை சரிந்தது. ஒரு பவுன் தங்கம் ரூ.72,120 மற்றும் ஒரு கிராம் தங்கம் ரூ.9,015-க்கும் விற்பனையானது. நேற்று முன்தினம் (ஏப்.22) சென்னையில் ஆபரணத் தங்கத்தின் மீதான விலை பவுனுக்கு ரூ.2,200 என உயர்ந்தது. வரும் 30-ம் தேதி அட்சய திருதியை நாளில் தங்கம் வாங்க விரும்பும் மக்கள் தங்கத்தின் விலை மேலும் குறைய வேண்டுமென்ற எதிர்பார்ப்பில் உள்ளனர்.

# உலகத்தையே புத்தகமாய் படித்தால் அனுபவம் தழைக்கும்

## உலக புத்தக நாளில் முதல்வர் ஸ்டாலின் பதிவு

**சென்னை, ஏப். 24-**

புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்; உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உலக புத்தக நாளை யொட்டி முதல்வர் ஸ்டாலினின் தன்னுடைய எக்ஸ் தளப் பதிவில், "புத்தகங்கள் - புதிய உலகிற்கான திறவுகோல்கள். நாம் வாழ்ந்து பார்க்காத வாழ்க்கை, நாம் சந்திக்காத மனிதர்கள், நாம் பார்த்திராத காலம் என அனைத்தையும் நமக்கு அறிமுகப்படுத்தும் நல்ல நண்பன்தான் புத்தகங்கள். அதனால்தான், சென்னை, மதுரையைத் தொடர்ந்து கோவை, திருச்சியிலும் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாபெரும் நூலகங்களை எழுப்பி வருகிறோம்.

மாவட்டந்தோறும் புத்தகக் காட்சிகள், இலக்கியத் திருவிழாக்கள், சொற்பொழிவுகள் என வாசிப்புப் பழக்கத்தைத் தீவிரமாக நமது திராவிட மாடல் அரசின் சார்பில் ஊக்குவித்து வருகிறோம். புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்; உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பஹல்காம் தாக்குதல் எதிரொலி: பிரதமரின் கான்பூர் பயணம் ரத்து

**புதுடெல்லி, ஏப். 24-**

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இன்று பிரதமர் மோடியின் கான்பூர் பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. ஜம்மு-காஷ்மிரின் சுற்றுலா நகரமான பஹல்காமில் உள்ள பைசாரன் பள்ளத்தாக்குப் பகுதியில் செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் கூடியிருந்தனர். அப்போது ஆயுதமேந்தி இந்தப் பகுதியில் நுழைந்த பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் 2 வெளிநாட்டவர் உள்பட 28 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில், பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி இன்று (ஏப். 24) கான்பூர் செல்லவிருந்த பயணம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கான்பூரில் ரூ.20,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட பிரதமர் மோடி கான்பூர் செல்ல இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பஹல்காம் தாக்குதலை கண்டித்து

# 35 ஆண்டுகளுக்கு பிறகு காஷ்மீரில் முழு அடைப்பு

**ஸ்ரீநகர், ஏப்.24-**

காஷ்மீர் பள்ளத்தாக்கின் பஹல்காம் சுற்றுலாத்தலத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து ஜம்மு காஷ்மீரில் 35 ஆண்டுகளுக்கு பின்பு முதல் முறையாக முழு கடையடைப்பு போராட்டம் நேற்று நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு காஷ்மீரின் சுற்றுலாத்தலமான பஹல்காமில் பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சுற்றுலா பயணிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து பள்ளத்தாக்கு முழுவதும், குறிப்பாக சுற்றுலா தலங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பயங்கரவாத தாக்குதலைக் கண்டித்து காஷ்மீரில் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது. இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: தலைநகர் ஸ்ரீநகரில் பெரும்பாலான கடைகளும், பெட்ரோல் பங்குகளும் மூடப்பட்டிருந்தன. நகர் முழுவதும் அத்தியாவசிய பொருள்களுக்கான கடைகள் மட்டுமே திறந்திருந்தன. பொதுப்போக்குவரத்து இயக்கப்படவில்லை. காஷ்மீர் முழுவதும் தனியார் பள்ளிகளும் இயங்கவில்லை. பிற மாவட்டத் தலைநகரங்களிலும் கடையடைப்புப் போராட்டம் நடந்தது. அதேபோல் பல்வேறு இடங்களில் மக்கள் அமைதியான முறையில் போராட்டத்திலும் ஈடுபட்டனர். இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தின் பஹல்காம் புல்வெளியில் நடந்த தாக்குதலைக் கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகள், சமூக - மத அமைப்புகள், வணிக அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் காஷ்மீரில் முழு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளன.

ஜம்மு காஷ்மீரில் ஆளும் தேசிய மாநாடு கட்சி, மக்கள் ஜனநாயக கட்சி, மக்கள் மாநாட்டு கட்சி மற்றும் அப்னி கட்சி போன்ற கட்சிகள் முழு அடைப்பு போராட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன. அதேபோல், ஹூரியத் மாநாட்டின் தலைவரான உமர் பரூக் தலைமையிலான பல்வேறு மத அமைப்புகளின் கூட்டமைப்பான முதாஹிதா மஜ்லிஸ் உலேமா, "காஷ்மீர் மக்கள் முழு அடைப்பு போராட்டத்தில் பங்கேற்று பயங்கரவாத தாக்குதலுக்கான தங்களின் எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# வேங்கைவயல் வழக்கு விசாரணை வரும் மே 12-ம் தேதிக்கு ஒத்திவைப்பு

**புதுக்கோட்டை, ஏப்.24-**

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் பட்டியலினக் குடியிருப்பில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட சம்பவத்தின் வழக்கு விசாரணை வரும் மே 12 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் பட்டியலினக் குடியிருப்பில் மனிதக்கழிவு கலக்கப்பட்ட சம்பவத்தில், விசாரணை நடத்தி வரும் சி.பி.சி.ஐ.டி. போலீஸார், அதே கிராமத்தைச் சேர்ந்த காவலர் முரளிராஜா மற்றும் முத்துக் கிருஷ்ணன், சுதர்சன் ஆகிய 3 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 12 ஆம் தேதி குற்றவியல் நடுவர் மன்றத்தில் அவர்கள் மூன்று பேருக்கும் குற்றப்பத்திரிகையின் நகல் வழங்கப்பட்டு, மார்ச் 20-க்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. அப்போது எங்களுக்கும் இச்சம்பவத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதால், வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என மூவரும் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர். இதற்குப் பதிலளிக்க சிபிசிஐடி போலீஸாருக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், வழக்கு விசாரணையை ஏப். 3-க்கு ஒத்திவைத்தது.

தொடர்ந்து, ஆதாரங்கள் வலுவாக இருப்பதால், அவர்களை விடுவிக்கக் கூடாது என சி.பி.சி.ஐ.டி. தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, இவ்வழக்கு இன்று(ஏப். 23) புதன்கிழமை புதுக்கோட்டை குற்றவியல் நடுவர் மன்றம் எண் 2-இல் விசாரணைக்கு வந்தது. குற்றம்சாட்டப்பட்ட மூவரும் ஆஜரான நிலையில், இவ்வழக்கு விசாரணையை வரும் மே 12ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதித்துறை நடுவர் ஜி. அற்புதவாணன் உத்தரவிட்டார்.

# வெளியேறும் சுற்றுலா பயணிகள்: காஷ்மீர் முதல்வர் உமர் வருத்தம்

**ஸ்ரீநகர், ஏப். 24-**

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரமான தாக்குதலைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் மாநிலத்தை விட்டு வெளியேறி வருவதால் முதல்வர் உமர் அப்துல்லா வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து உமர் அப்துல்லா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பஹல்காமில் நடந்த கொடூரமான பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து பள்ளத்தாக்கை விட்டு எங்களின் விருந்தினர்கள் வெளியேறுவதைப் பார்ப்பது வேதனை அளிக்கிறது.

ஆனாலும் மக்கள் ஏன் வெளியேற விரும்புகிறார்கள் என்பதை நாங்கள் முழுமையாக புரிந்து கொள்கிறோம்.

கூடுதல் விமான சேவைகளுக்காக டி.ஜி.சி.ஏ. மற்றும் மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் பணியாற்றி வரும் நிலையில், ஸ்ரீநகர் - ஜம்மு இடையேயான தேசிய நெடுஞ்சாலை 44 ஒரு வழிப் பாதைக்காக திறக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஸ்ரீநகரைச் சேர்ந்த அஜஸ் அலி என்ற சுற்றுலா ஏற்பாட்டாளர் கூறுகையில், "காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். என்றாலும் பஹல்காம் தாக்குதல் போன்ற சம்பவம் இங்கே நடந்த பிறகு யாரும் இங்கே தங்கி இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ரத்து செய்யப்பட்டுள்ளவை மிக அதிகம். கிட்டத்தட்ட 80 சதவீத பயணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அடுத்த ஒரு மாதத்துக்கும் கூட பயணங்கள் ரத்து செய்யப்படலாம். பல ஆண்டுகளாக செய்யப்பட்ட அனைத்து நல்ல விஷயங்களும் வீணாகிவிட்டன. காஷ்மீருக்கு மீண்டும் சுற்றுலா பயணிகளை கொண்டு வர நிறைய பாடுபட வேண்டி இருக்கும்." என்றார்.

இதனிடையே, ஸ்ரீநகர் வழித்தடத்தில் கட்டணங்களை அதிகரிக்கக் கூடாது என்றும், விமான நிறுவனங்கள் கூடுதல் விமானங்களை இயக்கவும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# ஸ்ரீபெரும்புதூர் நகராட்சியை கண்டித்து அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஏப்.24-**

ஸ்ரீபெரும்புதூர் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்து 28-ம் தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: ஸ்ரீபெரும்புதூர் நகராட்சி வாழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாத தி.மு.க.-வின் ஸ்டாலின் மாடல் அரசையும், ஸ்ரீபெரும்புதூர் நகராட்சி நிர்வாகத்தை கண்டித்தும்; காஞ்சிபுரம் மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஏப்ரல் 28-ம் தேதி திங்கட்கிழமை நடைபெறும்.

ஸ்ரீபெரும்புதூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான எந்த ஒரு பணியும் மேற்கொள்ளப்படவில்லை. கழக ஆட்சியின்போது, பொதுமக்களின் குடிநீர் தேவையைக் கருத்தில்கொண்டு 59.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நீர்தேக்கத் தொட்டிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.

நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் வசித்து வரும் மக்களுக்கு முறையாக மின்சாரம் வழங்கப்படுவதில்லை. மகான் ஸ்ரீ இராமானுஜர் அவதரித்த ஸ்ரீபெரும்புதூரில், ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திறந்து வைக்கப்பட்ட இந்த மணிமண்டபம் தற்போது எவ்வித பராமரிப்பும் இன்றி பாழடைந்துள்ளது. மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றாததை கண்டித்து அ.தி.மு.க. காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பில், வரும் ஏப்ரல் 28-ம் தேதி திங்கள்கிழமை காலை 10 மணியளவில், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக இலக்கிய அணிச் செயலாளர் வைகைச் செல்வன் தலைமையிலும்; காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.சோமசுந்தரம்; குன்றத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மதனந்தபுரம் பழனி; மாவட்டக் கழக துணைச் செயலாளர் போந்தூர் செந்தில்ராஜன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும். இதில், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் துணை நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு அரசுடன் அதிகார மோதல் இல்லை: கவர்னர் மாளிகை விளக்கம்

**சென்னை, ஏப்.24-**

துணைவேந்தர்கள் மாநாடு தொடர்பாக அரசுடன் எந்தவித அதிகார மோதலும் இல்லை என கவர்னர் மாளிகை விளக்கம் தெரிவித்துள்ளது. வருகிற ஏப்ரல் 25, 26, 27 ஆகிய தேதிகளில் துணை வேந்தர்கள் மாநாடு, நீலகிரியில் உள்ள கவர்னர் மாளிகையில் நடைபெறும் என்று கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது. இதில் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் பங்கேற்பார் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் கவர்னர் மாளிகையின் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், கவர்னர் மாளிகை இதற்கு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடத்தப்படும் துணைவேந்தர்கள் மாநாடு தொடர்பாக ஊடகங்களின் சில அறிக்கைகள், மாநில அரசுக்கும் கவர்னர் மாளிகைக்கும் இடையே அதிகாரப் போராட்டம் இருப்பது போல காட்டுகின்றன. இந்த அறிக்கைகள் முற்றிலும் தவறானவை. உயர்கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர்கள் கலந்துகொள்ளும் மாநாடு, 2022 முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் தமிழ்நாடு கவர்னர் தலைமையில் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் தங்களுடைய கருத்துகளையும் அனுபவங்களையும் நமது பகிர்ந்து கொள்கிறார்கள். முன்னதாக, தமிழ்நாட்டில் கல்வி நிறுவனங்கள் குறிப்பாக மாநில பல்கலைக்கழகங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி இருந்தன. இந்த மாநாடுதான் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து பணியாற்ற வழிவகுத்தன. ஒவ்வொரு ஆண்டும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் பல மாதங்களுக்கு முன்பே தொடங்கி நடைபெறுகின்றன. இந்த ஆண்டும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் ஜனவரி மாதமே தொடங்கப்பட்டுவிட்டது. சமீபத்திய நீதிமன்றத் தீர்ப்புடன் தவறாக இணைத்து, கவர்னர் மாளிகைக்கும் மாநில அரசுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டமாக அதைக் காட்ட முயற்சித்து வருகின்றன. இந்தத் தகவல்கள் அவதூறானவை" என்று கூறப்பட்டுள்ளது.

# டெல்டா பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்படுமா? அமைச்சர் விளக்கம்

**சென்னை, ஏப். 24-**

டெல்டா பகுதிகளில் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதிய சாலைகள் அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரம் நடைபெற்றது. அப்போது பேசிய காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச்செல்வன், காட்டுமன்னார்கோயில் தொகுதியில் வயல்வெளி பகுதியில் சேரும் சகதியாக இருப்பதால் சாலைகள் கூடுதல் தரமாக அமைக்கப்படுமா? என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, மண் தரத்தை சாலைகள் காலம் அமைப்பும், மண் தரம் சரியில்லை என்றால் சாலைகள் விரைவில் சேதமடையும்.

காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புது சாலைகள் அமைக்கப்படுவதை 3 ஆண்டுகளாக குறைக்க ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகளுக்கு ஏற்ப காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும் சாலைகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்படுவது குறித்து முடிவெடுக்கப்படும்' என்று கூறினார்.

# தாக்குதலில் மயிரிழையில் உயிர் தப்பிய கேரள உயர்நீதிமன்ற மூன்று நீதிபதிகள்

**ஜம்மு, ஏப்.24-**



காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம் தாக்குதலில் கேரள ஐகோர்ட்டு நீதிபதிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் நேற்று முன்தினம் சுற்றுலா பயணிகள் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த பயங்கரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயம் அடைந்தனர். இந்நிலையில், கேரள ஐகோர்ட்டு நீதிபதிகள் அனில் நரேந்திரன், அஜித்குமார், கிரிஷ் ஆகியோர் தங்கள் குடும்பத்தினருடன் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருந்தனர். அவர்கள் பஹல்காம் பகுதியில் பல்வேறு இடங்களுக்கும் சுற்றிப்பார்த்து விட்டு திரும்பிய சிறிது நேரத்தில் தான் அப்பகுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதனால் நீதிபதிகள் மற்றும் அவரது குடும்பத்தினர் மயிரிழையில் உயிர் தப்பி உள்ளனர்.

# சித்திரை திருவிழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய மதுரை மாநகராட்சிக்கு அறிவுறுத்தல்

## சட்டசபையில் அமைச்சர் கே.என்.நேரு தகவல்

**மதுரை, ஏப். 24-**

சித்திரை திருவிழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்ய மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தில் பேசிய எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சார்பில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மின் கட்டணம் செலுத்த வேண்டியிருப்பதாகவும், அந்த கட்டணத்தை செலுத்தினால் மட்டுமே சித்திரைத் திருவிழாவுக்கு மின்சாரம் வழங்க முடியும் என மாநகராட்சி ஆணையர் தெரிவித்திருக்கும் தகவல் அமைச்சருக்கு தெரியுமா என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்து பேசிய நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, சித்திரைத் திருவிழாவுக்கான முழு ஏற்பாடுகளையும் மதுரை மாநகராட்சி நிர்வாகமே செய்ய வேண்டும் எனவும், பணத்தை பற்றி கவலைப்படாமல் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்ய மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

# ஆனைமலையாறு, நல்லாறு விவகாரம்: சட்டப்பேரவையில் அமைச்சர் விளக்கம்

**சென்னை, ஏப். 24-**

ஆனைமலையாறு, நல்லாறு பேச்சுவார்த்தையில் கேரளா அரசு மெத்தனமாக உள்ளதாக சட்டசபையில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது கேள்வி எழுப்பிய கொங்கு ஈஸ்வரன், ஆனைமலையாறு, நல்லாறு உள்ளிட்ட 2 திட்டங்கள் குறித்து கேரளா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்து பேசியபோது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், "பரம்பிகுளம் ஆழியாறு ஒப்பந்தத்தின்படி, ஆனைமலையாறு நல்லாற்றில் இருந்து தண்ணீரை திருப்பி கொள்ளலாம். கீழே கேரளா அரசு அணை கட்டி உள்ளது. இந்த அணை கட்டி பல ஆண்டுகள் ஆகிவிட்டது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும் என்று கேரளா அரசுக்கு எத்தனையோ முறை கடிதம் எழுதி உள்ளோம். ஆனால் கேரளா அரசு மெத்தனமாக உள்ளது. மீண்டும் நேரில் சந்திக்கலாம் என்று முடிவு செய்து உள்ளோம்" என்று தெரிவித்தார்.

# பஹல்காம் தாக்குதலில் திருமணமான 7 நாட்களில் கடற்படை அதிகாரி பலி!

**கர்னால் (ஹரியானா), ஏப்.24-**



ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் , திருமணமாகி ஏழு நாட்களேயான ஹரியானா மாநிலம் கர்னாலைச் சேர்ந்த 26 வயதான இந்திய கடற்படை அதிகாரி லெப்டினன்ட் வினய் நர்வால் உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பஹல்காமில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் செவ்வாய்க்கிழமை கூடியிருந்த போது, பிற்பகல் 3 மணியளவில் பைசாரன் மலையிலிருந்து புல்வெளி பகுதிக்குள் திடீரென நுழைந்த பயங்கரவாதிகள், அங்கிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கொடூர தாக்குதலை நடத்தினர். இதில், 2 வெளிநாட்டினர் உள்பட 26 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில், திருமணம் ஆகி ஏழு நாட்களேயான ஹரியானா மாநிலம் கர்னாலைச் சேர்ந்த 26 வயதான இந்திய கடற்படை அதிகாரி லெப்டினன்ட் வினய் நர்வால் உயிரிழந்ததை கடற்படை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

வினய் நர்வால் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கடற்படையில் சேர்ந்துள்ளார். கேரளத்தின் கொச்சியில் பணியாற்றி வந்த நிலையில் ஏப்ரல் 16 ஆம் தேதி அவருக்கு திருமணமாகி ஏப்ரல் 19 ஆம் தேதி திருமண வரவேற்பு நடந்துள்ளது. திருமணத்திற்குப் பிறகு விடுமுறைக்காக காஷ்மீரில் இருந்துள்ளார். வினய் நர்வால் திருமணத்துக்குப் பிறகு குடும்பத்தினர் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்து வந்த நிலையில், செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் வினய் நர்வால் இறந்த செய்தி இடியாக வந்து சேர்ந்ததாக அவரது பக்கத்து வீட்டார் நரேஷ் பன்சால் தெரிவித்துள்ளார். நர்வால் இறப்பு குடும்பத்தினர், சமூகம் மற்றும் பாதுகாப்புத் துறையினர் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நாடு நல்ல ஒரு இளம் அதிகாரியை இழந்துவிட்டதாக உள்ளூர் வாசிகள் தங்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

## பஹல்காம் தாக்குதலின் போது

# பயங்கரவாதிகள் பிரதமருக்கு சொல்லியனுப்பிய செய்தி..!

**ஸ்ரீநகர், ஏப்.24-**

பஹல்காம் தாக்குதலில் கொல்லப்பட்டவரின் மனைவி மூலம் பிரதமர் நரேந்திர மோடிக்கு பயங்கரவாதிகள் செய்தி அனுப்பியுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பஹல்காமில் உள்ள பைசாரன் பள்ளத்தாக்கு பகுதியில் செவ்வாய்க்கிழமை நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் கூடியிருந்தனர். அப்போது ஆயுதங்களுடன் அப்பகுதிக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் சுற்றுலா பயணிகள் மீது சரமாரி தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவத்தில் 2 வெளிநாட்டவர் உள்பட 26 பேர் கொல்லப்பட்ட நிலையில், 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புல்வாமாவில் நடைபெற்ற தாக்குதலுக்கு பிறகு ஜம்மு - காஷ்மீரில் நடந்த மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது.

கர்நாடகாவின் ஷிவமோகாவைச் சேர்ந்த மஞ்சுநாத் - பல்லவி தம்பதியினர் மகனுடன் ஜம்மு - காஷ்மீருக்கு சுற்றுலா சென்றுள்ளனர். பஹல்காமில் நேற்று முன்தினம் நடைபெற்ற தாக்குதலில் மனைவி, மகன் கண் முன்னே மஞ்சுநாத்தை பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இதுகுறித்து பல்லவி கூறியதாவது:

"நான், என் கணவர் மற்றும் மகன் மூவரும் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றிருந்தோம். நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பஹல்காமில் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது என் கண்முன்னே அவரை கொன்றனர். கெட்ட கனவுபோல் இருக்கிறது. நான்கு பேர் எங்கள் மீது தாக்குதல் நடத்தினர். என் கணவரை கொன்றதை போல் என்னையும் கொன்றுவிடுங்கள் என்று அவர்களிடம் கூறினேன்.

அப்போது, உன்னை கொல்ல மாட்டேன், நடந்ததை உங்கள் பிரதமர் மோடியிடன் போய் சொல் என்று ஒரு பயங்கரவாதி தெரிவித்தார்" என்றார்.

பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்ட 26 பேரும் ஆண்களே ஆவர். பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தப்படவில்லை. சில பெண்களுக்கு லேசான காயங்கள் மட்டும் ஏற்பட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பஹல்காம் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை சட்டத்தின் முன்நிறுத்தி மத்திய அரசு கடுமையான தண்டனைப் பெற்றுத்தர வேண்டும். பயங்கரவாதமும், தீவிரவாதமும் முற்றிலும் ஒடுக்கப்பட அனைத்து முயற்சிகளிலும் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

**- ஜி.கே.வாசன்**



பஹல்காமில் நடந்த கொடூரமான தாக்குதலுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது. பாதிக்கப்பட்ட அப்பாவிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். துன்பங்களுக்கு மத்தியில் ஒற்றுமையுடன் செயல்படுவது காலத்தின் தேவை. இந்த எல்லை தாண்டிய பயங்கரவாத தாக்குதலுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட வேண்டியது அவசியம்.

**- கார்கே**



காஷ்மீரில் நடந்த தீவிரவாதத் தாக்குதல் மிகவும் கொடூரமானது, காட்டுமிராண்டித்தனமானது. மத்திய அரசு இது போன்ற தீவிரவாத தாக்குதல்கள் இனி எங்கும் நடக்காத வண்ணம் நாட்டினுடைய எல்லையை இன்னும் பாதுகாப்புடனும் வலுவானதாகவும் மாற்றி தீவிரவாத தாக்குதல்களில் இருந்து, மக்களை காக்க வேண்டும்.

**- பிரேமலதா**



பயங்கரவாதிகள் மக்களைக் கொல்வதற்கு முன்பு மதத்தைக் கேட்டால் அதற்கு பா.ஜ.க.வின் வெறுப்பு அரசியலே காரணம். வெறுப்பு அரசியல் ஒரு நாள் பெரிய பூமரங் போன்று வெடிக்கும். வேறு யாரும் அதற்குப் பொறுப்பல்ல. மேலும் இது மேற்கு வங்காளத்திலிருந்து ஜம்மு-காஷ்மீருக்குப் பரவிவரும் வெறுப்பின் விளைவு.

**- சஞ்சய் ராவத்**

### அருப்புக்கோட்டை பா.ஜ.க. சார்பில்
# தீவிரவாத தாக்குதலில் உயிர் நீத்தவர்களுக்கு மவுன அஞ்சலி



**அருப்புக்கோட்டை, ஏப்.24-**

ஜம்மு காஷ்மீர் பஹல்காம் பகுதியில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலில் உயிர் நீத்த பொது மக்களுக்கு மாநில செயற்குழு உறுப்பினர் விருதுநகர் கிழக்கு மாவட்ட பார்வையாளர் வெற்றிவேல் ஜி தலைமையில் நகர பாரதிய ஜனதா கட்சி சார்பில் இந்தியன் வங்கி முன்பு மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை நகர தலைவர் மாரிமுத்து, நகர பொது செயலாளர் பாண்டி, மாநில நெசவாளர் பிரிவு செயலாளர் தினேஷ் ராஜா, நெசவாளர் பிரிவு மாவட்ட தலைவர் கயாணிகுமார், மாவட்ட செயலாளர் சத்தியபாலன், ஓ.பி.சி. மாவட்ட தலைவர் ஆசைத்தம்பி, சுந்தரம், ராஜ கருப்பசாமி, தாணுபாலன், கோபால்ராஜ், கோபிகிருஷ்ணன், முத்துப்பாண்டி, ராஜசேகர், ஜெயராஜ், சிதம்பர ராஜா, மதியழகன், மோகன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் புத்தகக் கண்காட்சி



**பரமக்குடி, ஏப்.24-**

பரமக்குடி நீதிமன்ற கட்டிட வளாகத்தில் பரமக்குடி வழக்கறிஞர் சங்கமும், நியூ செஞ்சரி புக் ஹவுஸ் இணைந்து முதலாம் ஆண்டு புத்தகக் கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பரமக்குடி வழக்கறிஞர் சங்கத் தலைவர் பூமிநாதன் தலைமை வகித்தார். செயலாளர் யுவராஜா முன்னிலை வகித்தார். மாவட்ட கூடுதல் நீதிபதி சாந்தி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். சார்பு நீதிபதி சதீஷ், மாவட்ட உரிமையியல் நீதிபதி சுப்பிரமணியன், குற்றவியல் நடுவர் நீதிபதி பாண்டிய மகாராஜா விற்பனையை துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். புத்தக கண்காட்சியானது வரும் 25ஆம் தேதி வரை மொத்தம் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. கண்காட்சியில் இளம் வழக்கறிஞர்கள், பெண் வழக்கறிஞர்கள் புத்தகங்களை ஆர்வமுடன் வாங்கினர். நிகழ்ச்சியின் இறுதியில் பொருளாளர் ராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

# ரவுடி வெள்ளைக்காளிக்கு ஒரு நாள் போலீஸ் காவல்: திருமங்கலம் நீதிமன்றம் அனுமதி



**திருமங்கலம், ஏப்.24-**

மதுரை மாநகராட்சி முன்னாள் தி.மு.க. மண்டல தலைவரான வி.கே.குருசாமியின் சகோதரி மகன் கிளாமர் காளி. பிரபல ரவுடியான இவர் கடந்த மாதம் மார்ச் 22ம் தேதி தனக்கன்குளம் வெங்கலமூர்த்தி நகரில் ரவுடிகளால் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 10-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்ட நிலையில் முக்கிய குற்றவாளியான சந்திரபோஸ் என்ற ரவுடி போலீசாரால் என்கவுண்டர் செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலை சம்பவத்தில் பிரபல ரவுடி வெள்ளைக்காளியின் தாயார் உட்பட பலர் கைது செய்யப்பப்பட்ட நிலையில் ஏற்கனவே கொலை வழக்கு ஒன்றில் கைதாகி புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ரவுடி வெள்ளைக்காளியை, கிளாமர் காளி கொலை வழக்கின் சம்பந்தமாக விசாரணை செய்ய சென்னை புழல் சிறையிலிருந்து போலீசாரால் அழைத்து வரப்பட்ட வெள்ளைக்காளி கடந்த 21 ஆம் தேதி திருமங்கலம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இந்த வழக்கை விசாரித்த குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி செல்வகுமார் நேற்று மீண்டும் ஆஜர் படுத்த உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து நேற்று பலத்த போலீஸ் பாதுகாப்புடன் திருமங்கலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வெள்ளைக்காளி ஆஜர் படுத்தப்பட்டார். இந்த வழக்கினை விசாரணை செய்த நீதிபதியிடம் போலீசார் மூன்று நாள் காவலில் எடுத்து வெள்ளைக்காளியை விசாரிக்க வேண்டுமென அனுமதி கேட்டனர். எனினும் ரவுடி வெள்ளைக்காளியை ஒரு நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதி அனுமதி கொடுத்தும் மீண்டும் இன்று பிற்பகல் 2 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் போலீஸ் காவலில் இருக்கும் போது வெள்ளைக்காளியை வழக்கறிஞர்கள் சந்திக்கவும் அனுமதி அளித்தார்.

நீதிபதியின் உத்தரவை தொடர்ந்து ரவுடி வெள்ளைக்காளி கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்ட போலீஸ் வாகனத்தில் பலத்த பாதுகாப்புடன் ஆஸ்டின் பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு திருமங்கலம் ஏ.எஸ்.பி. அன்சுல் நாகர் தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



**கோடை வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்க மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகம் முன்பு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வின் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச்செயலாளர் எம்.முருகதாசன் பொதுமக்களுக்கு நீர்,மோர் வழங்கினார். அருகில் தலைமை கழக பேச்சாளர் பாவலர் ராமச்சந்திரன், அர்ச்சனா பிரபு, குமார் ஆகியோர் உள்ளனர்.**

### செந்துறை அருகே
# ஜக்காலம்மன் கோவில் திருவிழா



**நத்தம், ஏப்.24-**


திண்டுக்கல் மாவட்டம் நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செந்துறை அருகே பாறைப்பட்டியில் ஜக்காலம்மன் கோவில் திருவிழா நடந்தது. இதையொட்டி கடந்த 16-ம் தேதி காப்பு கட்டுதலுடன் விழா தொடங்கியது.

தொடர்ந்து நேற்று காலை பெண்கள் கொழுக்கட்டைகளுடன் ஊர்வலமாக வரும் நிகழ்ச்சியும், பின்னர் எருது ஓட்டமும் நடந்தது. பின்னர் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

### நத்தம் அருகே
# ஆட்டோ கவிழ்ந்து விபத்து

**நத்தம், ஏப்.24-**



திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தை சேர்ந்தவர் சையது அபுதாஹீர் (30). இவர் நேற்று முன்தினம் மதியம் தனது ஆட்டோவில் ஆட்களை ஏற்றிக் கொண்டு மதுரைக்கு சென்றுள்ளார். பின்னர் மதுரையில் அவர்களை இறக்கி விட்டுவிட்டு அலங்காநல்லூர் வழியாக நத்தம் வந்து கொண்டிருந்தார்.

லிங்கவாடி பகுதியில் வந்து கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ சாலையோரத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் சையது அபுதாஹீருக்கு லேசான காயம் ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் ஆட்டோவை அப்புறப்படுத்தினர். மேலும் இச்சம்பவம் குறித்து விசாரணையும் நடத்தி வருகின்றனர்.

# கே13 5ஜி-ஐ ஒப்போ அறிமுகப்படுத்துகிறது ரூ. 17,999-ல் தொடங்கும் கொண்ட ஸ்மார்ட்போன்

**கோவை, ஏப் 24-**

ஒப்போ இந்தியா நிறுவனம் ஒப்போ கே13 5ஜி-ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஆற்றல் திறன் மற்றும் பிரீமியம் பயனர் அனுபவத்துடன் "அதிகச் சக்திவாய்ந்த செயல்திறன் அனுபவத்தை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது. ஸ்னாப்டிராகன் 6 ஜெனரல் 4 மொபைல் தளத்தால் இயக்கப்படும் இந்த சாதனம், 80W சூப்பர் VooC வேகமான சார்ஜருடன் 7000 எம்ஏஎச் கிராஃபைட் பேட்டரி, இப்பிரிவில் முன்னணி விசி கூலிங், 120Hz எப்எச்டி+ அமோல்டு டிஸ்ப்ளே மற்றும் இன்டெலிஜென்ட் நெட்வொர்க் ஆப்டிமேஷன் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.சீரான பலவேறு பணி, அதிவேக கேமிங், நீண்டகால பேட்டரி ஆயுள், நம்பகமான இணைப்பு ஆகியவற்றை வழங்குகிறது. ஒப்போ கே13 5ஜி, அதன் பிரிவில் செயல்திறனை மறுவரையறை செய்ய மேம்பட்ட என்ஜினீயரிங் மற்றும் ரீஃபைன்ட் வடிவமைப்பை இணைத்து அர்த்தமுள்ள புதுமைக்கான ஒப்போ-வின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. சவியோ டி'சோசா, தயாரிப்பு தொடர்புத் தலைவர் ஒப்போ இந்தியா இவ்வாறு கூறினார். ஒப்போ கே13 மூலம், ரூ.20,000க்கு கீழ் உள்ள பிரிவுக்கு சமரசம் இல்லாமல் ஒரு ஓபி அனுபவத்தை நாங்கள் கொண்டு வருகிறோம்.

இப்பிரிவுகளில் சிறந்த விசி கூலிங் ஒன்றான ஸ்னாப்டிராகன் 6 ஜெனரல் 4 சிப்செட் அல்லது எங்கள் இன்டலிஜென்ட் கிராஃபைட் பேட்டரி தொழில்நுட்பம் எதுவாக இருந்தாலும், கே13-இன் ஒவ்வொரு அம்சமும் அதன் எடையை விட அதிகமான செயல்திறனை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது என்று ஸ்மிருதி ரவிச்சந்திரன், துணைத் தலைவர் மொபைல்ஸ், பிளிப்கார்ட் இவ்வாறு கூறினார். ஃபிளிப்கார்ட்டில், செயல்திறன், பேட்டரி ஆயுள், வடிவமைப்பு ஆகியவற்றின் மதிப்பில் சமரசம் செய்யாமல் இணைக்கும் ஸ்மார்ட்போன்களுக்கான நுகர்வோரிடமிருந்து அதிகரித்து வரும் தேவையை நாங்கள் தொடர்ந்து காண்கிறோம். ஒப்போ கே13 5ஜி-இன் அறிமுகம் இந்தப் போக்கிற்கு ஏற்ப அமைந்துள்ளது. ஒப்போ-இன் நம்பகமான புதுமையால் ஆதரிக்கப்படும் அதன் விரும்பிய அம்சங்களுடன், கேமிங், உள்ளடக்க உருவாக்கம் அல்லது அன்றாட ஆக்கத்திறன் என எதுவாக இருந்தாலும், தங்கள் சாதனங்களிலிருந்து அதிகம் எதிர்பார்ப்பவர்களுடன் கே13 வலுவாக எதிரொலிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

# திருவாரூரில் பியூர் மின்சார இருசக்கர வாகனத்தின் புதிய ஆர்.என்.எஸ். பைக் ஷோரூம் திறப்பு

**திருவாரூர், ஏப் 24-**

இந்தியாவின் முன்னணி மின்சார இருசக்கர வாகன உற்பத்தியாளர்களில் ஒன்றான பியூர் , தமிழ்நாட்டின் திருவாரூரில் அதன் புதிய ஆர்.என்.எஸ். எலக்ட்ரிக் பைக்குகள் ஷோரூமை திறந்திருப்பதை பெருமையுடன் அறிவிக்கிறது. இதன் தொடக்க விழாவில் டாக்டர் டி.ராஜா, டிசிஎச் மற்றும் தலைவர் கவிதா பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு இந்தியாவின் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்திற்கான மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கான பிராண்டின் நோக்கத்திற்கு ஆதரவை தெரிவித்தனர். இந்த நிகழ்வில் பியூர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் இணை நிறுவனர் ரோஹித் வதேரா கூறுகையில், திருவாரூரில் எங்கள் புதிய ஷோரூமை தொடங்குவதன் மூலம் தமிழ்நாட்டில் எங்கள் இருப்பை வலுப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த விரிவாக்கம் நாடு முழுவதும் மேம்பட்ட மற்றும் நம்பகமான மின்சார இயக்க தீர்வுகளை அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான எங்கள் நோக்கத்தில் ஒரு அர்த்தமுள்ள படியாகும். எங்கள் புதுமையான மின்சார வாகன போர்ட்ஃபோலியோவுடன், இந்தியாவின் தூய்மையான ஆற்றலுக்கான மாற்றத்தை ஆதரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் எங்கள் பியூர்பவர் எரிசக்தி சேமிப்பு தயாரிப்புகளையும் காட்சிப்படுத்துவதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். அதிநவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் நிலையான உற்பத்திக்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, எங்கள் வளர்ச்சி மற்றும் புதுமைகளை தொடர்ந்து இயக்குகிறது என்று கூறினார். புதிதாக தொடங்கப்பட்ட ஷோரூம், பியூர் நிறுவனத்தின் உயர் செயல்திறன் கொண்ட மின்சார இரு சக்கர வாகனங்களின் முழு வரிசையையும் காட்சிப்படுத்துகிறது. இதில் இ-ட்ரிஸ்ட் எக்ஸ்,இபுளூட்டோ 7ஜி மேக்ஸ், eco ட்ரைஃப்ட், எட்ரான்ஸ் நியோ+போன்ற முதன்மை மாடல்கள் மற்றும் பியூர்பவர் தயாரிப்புகளும் கிடைக்கும்.



**அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மதுரைமாநகர் மேற்கு 1-ம் பகுதி அ.தி.மு.க. செயலாளராக பொறுப்பேற்ற எஸ்.எம்.டி.ரவி நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார்.**

### மதுரை தமுக்கம் மைதானத்தில்
# தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் நடத்தும் பொருட்காட்சியை துணை மேயர் நாகராஜன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்



**மதுரை, ஏப் 24-**

மதுரை தமுக்கம் மைதானத்தில் தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் நடத்தும் பொருட்காட்சியை மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார்.

தமிழ்நாடு தொழில் வர்த்தகசங்கத்தின் சார்பில், தொழில்வர்த்தக பொருட்காட்சி மதுரைதமுக்கம் மைதானத்தில் சங்கத்தலைவர் ஜெகதீசன் தலைமையில் மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன் வடக்கு மண்டல தலைவர் திருமதி சரவண புவனேஸ்வரி குத்து விளக்கு ஏற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் பொருள்காட்சி குழுத் தலைவர் வரதராஜன், செயலாளர் ஸ்ரீதர் ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்குமார், சாகித் அலி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின்சார்பில் மதுரையில் 19 ஆண்டுக்கும் மேலாக தொழில் வர்த்தக பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இப்பொருட்காட்சியில் ஜவுளி, கட்டுமானம், வங்கிகள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தயாரிப்பு எனசுமார் 200-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவுக்கட்டணம் கிடையாது.

தென்தமிழகத்தில் முதன் முறையாக 12-டி தொழில்நுட்பம்கொண்ட விளையாட்டுகள்அடங்கிய பஸ் இந்த பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ளது.இதில் சிறுவர்கள் ஆர்வமுடன் பங்கேற்கலாம். இது தவிர, 15-க்கும் மேற்பட்ட உணவு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.பொருட்காட்சி தினமும் காலை 11 மணி முதல் இரவு 9மணி வரை நடக்கிறது. ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கு ஒருமுறை குலுக்கல் முறையில் 5பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான பொருட்காட்சிக்கு வரும்போது பெற்றுக் கொள்ளலாம். குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு முதல் பரிசாக ரூ.4 ஆயிரம் மதிப்புள்ளபட்டுப்புடவை, 2-ம் பரிசாகமெத்தை, 3-ம் பரிசாக குக்கர்,இஸ்திரி பெட்டி ஆகியனவும்,4-ம் பரிசாக 26 கிலோ அரிசி,5-வது பரிசாக சூரியஒளி மின்விளக்கு ஆகியவை வழங்கப்படும். நிகழ்ச்சியின் நிறைவு நாள் தினத்தில் மெகா பம்பர் குலு=க்கல் நடைபெறும். இதில்முதல் பரிசாக நிப்பான் பர்னிச்சர் வழங்கும் மோட்டார் சைக்கிள், 2-ம் பரிசாக பாண்டியன் ட்டார்ஸ் வழங்கும் டி.வி.எஸ். ஸ்கூட்டி மற்றும் 2 எலக்டிரிக் ஸ்கூட்டர்கள், 3-ம் பரிசாக2 கதவுகளை கொண்ட குளிர் சாதன பெட்டி ஆகியன வழங்கப்படும்.

பொருட்காட்சிக்கு ழைவுக்கட்டணம் கிடையாது. பொருட்காட்சியை மதுரையை சுற்றியுள்ள மேலூர், விருதுநகர், திருப்பரங்குன்றம், திருமங்கலம்,சோழவந்தான், சமயநல்லூர் ,மதுரை மாநகர் பகுதியில் இருந்தும் பொதுமக்களும் வியாபாரிகளும் மாணவமாணவிகளும் சிறுவர்களும் பொருட்காட்சியை காண வந்திருந்தனர்.

# மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் அட்சய திருதியைக்கு தனித்துவமான சலுகைகளை அறிவித்துள்ளது

**சென்னை, ஏப் 24-**

பொறுப்புமிக்க ஜூவல்லரான மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் அட்சய திருதியைக்கான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட விழாக்காலச் சலுகையை பெருமையுடன் அறிவிக்கிறது. தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு மதிப்பையும், நம்பிக்கையையும் மற்றும் சிறப்பையும் அளிக்கும் அதே பாரம்பரிய முறைப்படி, மலபார் இந்த மங்களகரமான நிகழ்வை இன்னும் மறக்க முடியாததாக மாற்றும் வகையில் பிரத்தியேகமான சலுகைகளை வழங்குகிறது.அட்சய திருதியையின் ஒரு பகுதியாக, மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தங்க நகைகளுக்கான சேதாரத்தின் மீது 25% வரை தள்ளுபடியையும், ஜெம் ஸ்டோன்கள் மற்றும் அன்கட் வைர நகைகளின் சேதாரத்தின் மீது பிளாட் 25% தள்ளுபடியையும், வைரத்தின் மதிப்பில் 25% தள்ளுபடியையும் வழங்குகிறது. மதிப்புடன் கைவினைத்திறனையும் வெளிக்காட்டும் ஆபரணங்களில் வாடிக்கையாளர்கள் முதலீடு செய்யும் தனித்துவமான வாய்ப்பை இந்த விழாக்காலச் சலுகைகள் அளிக்கின்றன.

வாங்கும் அனுபவத்தை இன்னும் சிறப்பாக்கும் விதத்தில், முன்பதிவு செய்வோருக்கு இலவச வெள்ளி நாணயத்தையும் மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் அளிக்கிறது. நகையின் மொத்த விலையில் குறைந்தபட்சம் 10% தொகையைச் செலுத்தி வாடிக்கையாளர்கள் தங்களுடைய நகைகளை முன்பதிவு செய்து, தங்க விலை ஏற்றத்திலிருந்து தங்கள் நகைகளைப் பாதுகாத்துக்கொள்ளலாம். இறுதி விலை என்பது முன்பதிவு செய்யப்பட்ட விலையாகவோ அல்லது அன்றைய சந்தை விலையாகவோ (இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ அது) இருக்கும். இது வாடிக்கையாளர்களுக்கு பலனளிப்பதாக இருக்கும். மங்கலகரமான அட்சய திருதியை கொண்டாடும் வகையில், மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் 'தன்வீகா' எனப்படும் தனித்துவமான டிவைன் பிராண்டின் கீழ் புதிய நகைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த நகைகள் பக்தியை கொண்டாடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. தெய்வீகத்தால் உந்தப்பட்டு, நிகரில்லா கைவினை கலைஞர்களால் உயிர்ப்பிக்கப்பட்ட இந்தத் தொகுப்பில், ஒவ்வொரு நகையும் காலத்தால் அழியாத மரபுகளையும், இந்த பண்டிகைக் காலத்தின் நேர்த்தியையும் மிகுதியையும் பிரதிபலிக்கிற பிரமிக்க வைக்கும் புதிய வடிவமைப்புகள் உள்ளன.

விழாக்கால சலுகைகள் பற்றி மலபார் குழுமத்தின் தலைவரான எம்.பி.அஹமது கூறுகையில், அட்சய திருதியை, செழிப்பு மற்றும் புதிய தொடக்கங்களின் நாளாக மகத்தான கலாச்சார முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. மலபார் கோல்டு & டைமண்ட்ஸில், ஒப்பிடமுடியாத மதிப்பு மற்றும் காலத்தால் அழியாத வடிவமைப்புகளை வழங்குவதன் மூலம் இந்த நிகழ்வை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு இன்னும் சிறப்பானதாக மாற்றுவதே எங்களுடைய நோக்கம். எங்கள் நன்றியைத் தெரிவிக்கவும், எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுடன் நீடித்த உறவுகளைத் தொடர்ந்து கட்டியெழுப்பவும் ஒரு வழியாக எங்களுடைய பிரத்யேக சலுகைகள் அமைந்துள்ளன.அட்சய திருதியை என்பது செழிப்பை வரவேற்கக்கூடிய மற்றும் புதிய தொடக்கங்களைக் குறிக்கும் ஒரு காலம் என பரவலாகக் கருதப்படுகிறது. இந்த விழாக் காலத்தில் நல்ல அர்த்தமுள்ள விதத்தில் நகைகளை வாடிக்கையாளர்கள் வாங்குவதற்கு உதவுவதற்காக மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் சிறந்த சலுகைகளையும் எளிதானது முன்பதிவு வாய்ப்புகளையும் வழங்குகிறது என்று கூறினார்.

# விவேகானந்தர் வித்யா மந்திர் மழலையர் பள்ளியில் பட்டமளிப்பு விழா

**ஒட்டன்சத்திரம், ஏப்.24-**

ஒட்டன்சத்திரம் அருகே நவாமரத்துபட்டி விவேகானந்தர் வித்யா மந்திர் சி.பி.எஸ்.இ. பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா விவேகானந்தா கல்வி குழும தலைவர் ரங்கசாமி, துணைத் தலைவர் கலைவாணி தலைமையில் நடைபெற்றது . விழாவிற்கு நிர்வாக இயக்குனர் அருண் கீர்த்தி,பள்ளி முதல்வர் மகிபாலா முன்னிலை வகித்தனர். குழந்தைகளுக்கு பட்டம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது. விழாவில் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியைகள் மாணவ,மாணவிகள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# சமூக, பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களுக்கு உதவி காவல் ஆய்வாளர் தேர்விற்கு இலவச பயிற்சி




**மதுரை, ஏப் 24-**

தமிழக காவல் துறையில் உதவி காவல் ஆய்வாளர் தேர்வு சில மாதங்களில் நடைபெற இருக்கிறது. இத்தேர்வில் கலந்து கொள்ள இருக்கும் சமூக மற்றும் பொருளாதார நிலையில் பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு வல்லமை அறக்கட்டளை மற்றும் TAF கோச்சிங் அகாடமி (தென்காசி ஆகாஷ் பௌண்டேஷன்) இணைந்து மதுரையில் தங்கும் வசதி மற்றும் உணவுடன் இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது குறித்து வல்லமை அறக்கட்டளையின் நிர்வாகிகள் வள்ளியம்மை, உமாதேவி, அக்ஷ்தா ஆகியோர் செய்தியாளர்களை சந்தித்தனர். இந்த இலவச பயிற்சி குறித்து அவர்கள் கூறுகையில், உதவி ஆய்வாளர் தேர்விற்கு தயாராகும் மாணவ மாணவியருக்கு வல்லமை அறக்கட்டளை அளிக்கக்கூடிய இலவச பயிற்சியில் சேர்வதற்காக நுழைவுத் தேர்வானது வரும் ஏப்ரல் 29 ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் 60 மையங்களில் நுழைவுத் தேர்வு நடத்தப்பட உள்ளது. இத்தேர்வில் கலந்துகொண்டு அதிக மதிப்பெண்கள் பெறக்கூடிய 100 மாணவர்களுக்கு இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் திருநங்கைகளும் இத்தேர்வில் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்தனர்.

இது குறித்து அறக்கட்டளை நிர்வாகி உமாதேவி கூறுகையில், தமிழக காவல் துறையில் 1400 உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான தேர்வு சில மாதங்களில் நடைபெற இருக்கிறது. இத்தேர்வில் கலந்து கொள்ளக்கூடிய சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ மாணவிகளுக்காக இலவச பயிற்சி அளிக்க உள்ளோம். இப்பயிற்சியில் சேர்வதற்காக தமிழ்நாடு முழுவதும் ஏப்ரல் 29 ஆம் தேதி 60 இடங்களில் நுழைவு தேர்வு நடைபெற உள்ளது. நுழைவுத் தேர்வில் வெற்றி பெறக்கூடிய 200 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு மதுரை பெருங்குடியில் உள்ள மையத்தில் மூன்று மாத காலத்திற்கு தங்கும் வசதி மற்றும் உணவுடன் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளது. மூன்று மாத பயிற்சியில் எழுத்து தேர்வுக்கான வகுப்புகளை ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளை கொண்டு பயிற்சி அளிக்கப்பட இருப்பதாகவும் உடல் தகுதி தேர்வுக்கான பயிற்சி TAF கோச்சிங் அகாடமி பயிற்சியாளர்கள் மூலம் வழங்கப்பட உள்ளது எனவும் கூறினார்.

# மாமிபோகோ பேண்ட்ஸ் துவங்கிய 'வணக்கம் போகோ தல' கேம்பைன்

**சென்னை, ஏப்.24-**

தென்னிந்தியாவில் குழந்தை சுகாதாரத்தில் அக்கறை கொள்ளும், நாட்டின் டிஸ்போசபிள் டயப்பர்களின் முன்னோடியான யூனிசார்ம் இந்தியா நிறுவனமானது, சென்னையில் அதன் முதன்மை விழிப்புணர்வு பிரச்சாரமான 'வணக்கம் போகோ தல' கேம்பைனை துவங்கியுள்ளது. இந்த முயற்சியானது நகரம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் 4,000 க்கும் மேற்பட்ட தாய்மார்களுடன் ஈடுபடவும், குழந்தை ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் தடையற்ற ஆழ்ந்த தூக்கத்திற்கு உயர்தர டிஸ்போசபிள் டயப்பர்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, பிராந்தியத்தில் புதிய தாய்மார்களுடன் இன்னும் ஆழமாக இணைவதற்கும், தாய்வழி விழிப்புணர்வு மற்றும் குழந்தை பராமரிப்பின் நோக்கத்தை ஆதரிப்பதற்கும், தமிழ்நாட்டில் அதிகாரப்பூர்வ பிராண்ட் தூதராக புகழ்பெற்ற தென்னிந்திய நடிகை அமலா பால் உடன் இந்த பிராண்ட் கைகோர்த்துள்ளது.

யூனிசார்ம் இந்தியாவின் விற்பனை மூத்த இயக்குநர் திரு. ஆஷிஷ் குமார் வர்மா கூறுகையில், "இந்தியா முழுவதும் சுகாதாரத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்த விரும்புவதற்கு ஏற்ப, இந்த அர்த்தமுள்ள முன்முயற்சியைத் தொடங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

நிகழ்ச்சியில் பேசிய யூனிசார்ம் இந்தியாவின் சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் தோஷியுகி நகமுரா, "எங்கள் உயர்ந்த தயாரிப்பு தரம் இந்தியா முழுவதும் உள்ள கோடிக்கணக்கான தாய்மார்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளது. வணக்கம் போகோ தல பிரச்சாரத்தின் மூலம், இளம் தாய்மார்களுக்கு சரியான டயப்பரைத் தேர்ந்தெடுப்பது, தங்கள் குழந்தைகளுக்கு தடையற்ற தூக்கத்தை உறுதி செய்வது மற்றும் சுகாதாரமான சூழலைப் பராமரிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து கற்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.'' என்றார்.

# சென்னையின் ரெட் ஹில்ஸில் புதிய டீலர்ஷிப்பை திறந்திருக்கிறது ஐஷர்

**சென்னை, ஏப்.24-**

வி.இ. கமர்ஷியல் வெஹிகில்ஸ் லிமிடெட்டின் (VECV) வணிகப் பிரிவான ஐஷர் டிரக்ஸ் & பஸ்ஸஸ், சென்னையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஐஷர் புரோ எக்ஸ் சிறிய லாரிகளுக்கான பிரத்யேக டீலர்ஷிப்பைத் தொடங்கியுள்ளது. சென்னை ரெட் ஹில்ஸில் உள்ள புதிய டி.ஆர்.ஆர். டிரக்ஸ் & பஸ்ஸஸ் 3S டீலர்ஷிப், சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. வாகனம் வாங்குதல், சேவை அனுபவத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் மேம்படுத்த தொழில்நுட்பத்தை இது பயன்படுத்துகிறது. அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் கூடிய இந்த டீலர்ஷிப், வாடிக்கையாளர்கள் ஐஷர் புரோ எக்ஸ் வரம்பைப் பற்றிய ஆழமான நுண்ணறிவை வழங்குவதை உறுதிசெய்கிறது. தெளிவான முடிவுகளை எடுக்கவும், புதுமை கண்டறிதல் - செயல்திறனுக்கான ஐஷரின் தொழில்துறை அர்ப்பணிப்பைப் பயன்படுத்திக் கொள்ளவும் இது உதவுகிறது.

VECVஇன் வாடிக்கையாளர் சேவை, சில்லறை சிறப்பு விற்பனை - நெட்வொர்க் மேம்பாட்டிற்கான EVP ரமேஷ் ராஜகோபாலன் கூறுகையில், "சென்னை பாரம்பரியமாக தென்னிந்தியாவின் இடப்பெயர்ச்சி மையமாக இருந்து வருகிறது. மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஐஷர் புரோ எக்ஸ் சிறிய லாரிகளுக்கான டி.ஆர். ஆர். டிரக்ஸ் & பஸ்ஸஸ் பிரத்யேக டீலர்ஷிப்பை சென்னையில் திறப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்''.

இந்தப் புதிய டீலர்ஷிப், ஐஷரின் தொழில்துறை-முதல் பயன்பாட்டு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அதிகபட்ச வாகனங்கள் கிடைக்கும் தன்மை, செயல்பாட்டுத் திறனை உறுதிசெய்ய முடிகிறது. கூடுதலாக, இந்த டீலர்ஷிப் பிரத்யேக மின் வாகன சார்ஜிங் உள்கட்டமைப்பு வசதியை (வேகமான & மெதுவான சார்ஜர்கள்), குறிப்பிட்ட மின் வாகன சேவை பகுதிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது சிறிய மின் லாரிகளுக்கான வளர்ந்து வரும் தேவையை ஆதரிக்கிறது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 /94**

# எம்ஜிஎம் ஹெல்த்கேர்-ல் 6 வயது சிறுவனுக்கு இதயத்தில் வெற்றிகரமாக அறுவைசிகிச்சை

**சென்னை, ஏப் 24-**

மார்பின் இடது புறத்திற்கு பதிலாக வலது புறத்தில் இதயம் அமைந்திருக்கும் நிலையில் உடலின் எஞ்சிய பகுதிகளுக்கு இதயத்திலிருந்து செல்லும் இரத்தத்தை தீவிரமாக அடைத்திருக்கும் ஒரு உயிருக்கு ஆபத்தான நிலையிலிருந்த 6 வயதான சிறுவனுக்கு இதய அறுவைசிகிச்சையை எம்ஜிஎம் ஹெல்த்கேர் வெற்றிகரமாக செய்து அவனது உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. இடது இதய கீழறையில் இரத்தம் வெளியேறும் பாதையில் தீவிர அடைப்பு என்ற பிரச்சனை சிறுவனுக்கு இருந்தது. இச்சிறுவனின் இயற்கையான இதய வால்வுகளை அப்படியே அகற்றாமல் தக்கவைக்கும் அதே வேளையில் அடைப்பை எடுத்து நிவாரணமளிக்கிற ஒரு தனிச்சிறப்பான செயல்முறையான, 'மாற்றப்பட்டிருக்கிற கொன்னோ செயல்முறை' என்பதை செய்வதற்கு மருத்துவர்கள் குழு முடிவு செய்தது. ராஸ் செயல்முறை போன்ற வழக்கமான மருத்துவச் செயல்முறைகளில், செயற்கை வால்வுகளை பொருத்துவது இடம்பெறும். இந்த அறுவைசிகிச்சைக்கு பிறகு மேம்படுத்தப்பட்ட இதய இயக்கச் செயல்பாட்டோடு இந்த இளம் நோயாளி நன்றாக உடல் நலம் தேறியிருக்கிறான்.

இச்சிறுவனுக்கு மார்பு வலியும் மற்றும் மூச்சு விடுவதில் சிரமமும் இருந்து வந்திருக்கிறது. எம்ஜிஎம் ஹெல்த்கேர்-ல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது உடனடியாக அவனுக்கு மேற்கொள்ளப்பட்ட நோயறிதல் பரிசோதனையில் தீவிர LVOT அடைப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லையென்றால் இதய செயலிழப்பு அல்லது உயிருக்கு ஆபத்தான பிற சிக்கல்களுக்கு இது வழிவகுத்து விடும். சிறுவனுக்கு இருந்த தீவிர பாதிப்பையும் அவசர சிகிச்சையளிப்பதற்கான அவசரத்தையும் உணர்ந்த இம்மருத்துவமனை அடைப்பை அகற்றுவதற்கும் மற்றும் இதயத்திலிருந்து உடலின் பிற பகுதிகளுக்கு இயல்பான இரத்த ஓட்டத்தை மீண்டும் ஏற்படுத்தவும் இந்த இடையீட்டு அறுவைசிகிச்சையை மேற்கொண்டது. உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையை இச்சிறுவன் பெறுவதை உறுதி செய்யும் வகையில் ஐஸ்வர்யா டிரஸ்ட் என்ற தொண்டு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு எம்ஜிஎம் ஹெல்த்கேர்-ல் இச்சிறுவனின் உயிரைக் காப்பாற்றுவதற்கான அறுவைசிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது. எம்ஜிஎம் ஹெல்த்கேர் மருத்துவமனையின் குழந்தைகளுக்கான இதய அறுவைசிகிச்சை துறையின் முதுநிலை நிபுணர் டாக்டர் ஆர்.கே.ஆர்.நவீன் டேவிட்சன், இந்த அறுவைசிகிச்சையை, மயக்கவியல் துறை நிபுணர் டாக்டர் சுரேஷ் ராவ் கே.ஜி. மற்றும் குழந்தைகளுக்கான இதயவியல் சிகிச்சைக் குழுவின் சிறப்பான ஆதரவோடு வெற்றிகரமாக செய்தார்.

காஷ்மீர் பஹல்காம் தாக்குதல் தொடர்புடைய

# நான்கு பயங்கரவாதிகளின் புகைப்படங்கள் வெளியீடு



**ஜம்மு, ஏப். 24-**

பஹல்காம் தாக்குதல் தொடர்புடையதாக கருதப்படும் 4 பயங்கரவாதிகளின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காம் என்ற இடத்தில் ரிசார்ட் பகுதி அருகே நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் சுற்றுலா பயணிகளைக் குறி வைத்து திடீர் தாக்குதல் நடத்தினர்கள். இந்த தாக்குதலில் 2 வெளிநாட்டவர் உட்பட 26 சுற்றுலாப்பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த கொடிய தாக்குதலுக்குப் பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் பொறுப்பேற்றுள்ளது. தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நான்கு பயங்கரவாதிகளின் புகைப்படத்தை பாதுகாப்புப் படையினர் நேற்று வெளியிட்டனர்.

இவர்கள் ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் அமைப்பை சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. தாக்குதலில் ஈடுபட்ட மூன்று பயங்கரவாதிகளின் ஓவியங்களையும் பாதுகாப்பு படையினர் வெளியிட்டனர். அதிகாலையில், பயங்கரவாதிகளில் ஒருவரின் முதல் படமும் ஆன்லைனில் வெளியானது. அந்தப் படத்தில் பயங்கரவாதி ஏகே-47 துப்பாக்கியை வைத்திருப்பதைக் காட்டுகிறது.

# பயங்கரவாத தாக்குதலில் உயிரிழந்தோர் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரணம்

## காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா அறிவிப்பு

**ஸ்ரீநகர், ஏப்.24-**

ஜம்மு-காஷ்மீரின் பெஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் உயிரிழந்தோருக்கு அந்த மாநில முதல்வர் ஒமர் அப்துல்லா நிவாரணம் அறிவித்துள்ளார்.

பெஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடத்திய கொடூரத் துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 2 வெளிநாட்டினர் உள்பட 26 பேர் கொல்லப்பட்டனர். முன்னதாக கடந்த 2018ல் புல்வாமாவில் நடத்தப்பட்ட மிகப்பெரிய பயங்கரவாத தாக்குதலுக்குப் பிறகு காஷ்மீரில் நடந்த மிகப்பெரிய பயங்கரவாத தாக்குதல் இதுவாகும்.

இதுதொடர்பாக முதல்வர் ஒமர் அப்துல்லா வெளியிட்ட அறிக்கையில், தாக்குதல் குறித்துச் செய்தியறிந்து நம்பமுடியாத அளவுக்கு அதிர்ச்சியடைந்தேன். சுற்றுலாப் பயணிகள் மீதான இத்தாக்குதல் அருவருப்பானது. பெஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிதி அளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். உயிரிழந்தவர்களின் உடல்களை சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பின்னணியில் உள்ளவர்களை நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

**மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி**

## காணவில்லை

கடந்த 20.05.2024ந் தேதி காளையார் கோவில் பேருந்து நிலையம் அருகே வரும்பேது கைபையில் இருந்து அசல் ஆவண எண்கள்.215/1999,494/2003 இளையான்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாலுத்தேவர்
த/பெ.அம்பலகாரத்தேவர்
பெரியகண்ணனூர் கிராமம்
காளையார்கோவில் வட்டம்
சிவகங்கை மாவட்டம்
செல் எண்.9865044522

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
சிவகங்கை
ந.க.அ1/5070/2024
அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மேலப்பிடாவூர் குரூப் செய்யாலூர் கிராமம், என்ற முகவரியில் வசிக்கும் திரு. தங்கம் த/பெ சின்னதம்பியாபிள்ளை என்பவரின் தந்தை சின்னதம்பியாபிள்ளை என்பவர் கடந்த 08.07.1981-ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார்.மேற்படி இறப்பை பதிவு செய்யாமல் போய்விட்டது. இந்த இறப்பினை பதிவு செய்ய வேண்டி சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரப்பெறவில்லையெனில், விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விவரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

தங்கம்,
மனுதாரர்.

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
சிவகங்கை
ந.க.அ1/6707/2024
அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மேலப்பிடாவூர் குரூப் செய்யாலூர் கிராமம், என்ற முகவரியில் வசிக்கும் திரு. தங்கம் த/பெ சின்னதம்பியாபிள்ளை என்பவரின் தாயார் முத்துராக்கம்மாள் என்பவர் கடந்த 16.10.1997-ம் தேதியன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்யாமல் போய்விட்டது. இந்த இறப்பினை பதிவு செய்ய வேண்டி சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் உதவி ஆட்சியர் அலுவலகத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரப்பெறவில்லையெனில், விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவுகள் பிறப்பிக்க கோரப்படும் என்ற விவரம் இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

தங்கம்,
மனுதாரர்.

ந.க.எண்.2059/2025
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம்இ சிவகங்கை
அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், 69 நெல்மண்டி தெரு என்ற முகவரியில் வசிக்கும் பாலகுமார் என்பவரின் தாயார் காமாட்சி க/பெ. குருசாமி என்பவர் கடந்த 15.01.1996ந் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பாலகுமார்
மனுதார்

ந.க.எண்.2059/2025
வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம், சிவகங்கை
அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், 69 நெல்மண்டி தெரு என்ற முகவரியில் வசிக்கும் பாலகுமார் என்பவரின் தாயார் காமாட்சி க/பெ. குருசாமி என்பவர் கடந்த 15.01.1996ந் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டார். மேற்படி இறப்பு பதிவு செய்யப்படவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக்கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபணையை எழுத்துபூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை எனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறுள்ள இறப்பினை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பாலகுமார்
மனுதார்

# சித்திரை வீதிகளில் 'பசுமை மாறா மூங்கில் குப்பை கூடைகள்': மதுரை மாநகராட்சி முயற்சி



**மதுரை, ஏப்.24-**

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலை சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளில் சேரும் குப்பைகளை எளிதில் அகற்றிட வைக்கப்பட்டுள்ள 'பசுமை மாறா மூங்கில் குப்பைக்கூடைகள்', பக்தர்கள், சுற்றுலாப் பயணிகளிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா வரும் 29-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அழகர் கோயில் சித்திரைத் திருவிழாவும், இக்கோயில் விழாவுடன் இணைந்து நடத்தப்படுகிறது. இந்த திருவிழா நாட்களில் பட்டாபிஷேகம், திருக்கல்யாணம், தேர்த்திருவிழா மற்றும் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி போன்றவை நடக்கிறது. சாதாரண நாட்களில் ஒரு நாளைக்கு மீனாட்சியம்மன் கோயிலை சுற்றி, தினமும் 20 டன் குப்பைகள் சேரும்.

தற்போது திருவிழா நேரம் என்பதால், சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள் வருகை அதிகமாக இருப்பதால் 30 டன் வரை குப்பைகள் சேகருகின்றன. இந்த குப்பைகளை சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு மதுரை மீனாட்சியம்மன் கோயிலை சுற்றியுள்ள நான்கு சித்தரை வீதிகளில் சேரும் குப்பைகளை எளிதில் அகற்றிட மாநகராட்சி ஆணையர் சித்ராவின் முயற்சியால் 'பசுமை மாறா மூங்கில் குப்பைக்கூடைகள்' வைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து மாநகராட்சி நகர் நல அதிகாரிகள் கூறுகையில், "கோயிலுக்கு வருகிறவர்கள் ஒரே இடத்தில் நிற்பதில்லை. அவர்கள் சித்திரை வீதிகள், மாசி வீதிகள் என இடம்பெயர்ந்து கொண்டே இருப்பார்கள். அப்படி அவர்கள் வரும்போதும், திரும்பி செல்லும்போதும் கைகளில் குடிநீர், குளிபான பாட்டில்கள், சாப்பாடு பார்சல், பூக்கள், பிரசாதம் மற்றும் பல்வேறு பொருட்களை கொண்டு வருகிறார்கள். அவற்றை பயன்படுத்திவிட்டு கடந்த காலத்தில் கோயிலைச் சுற்றி சித்திரை, மாசி வீதிகளில் வீசி செல்கிறார்கள்.

அந்த குப்பைகளை அப்புறப்படுத்துவதற்கு தூய்மைப் பணியாளர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். வீதிகளில் சிதறி கிடக்கும் இந்த குப்பைகளை எடுக்கும் வரை குப்பைகளாக காணப்படுகின்றன. அதனால், எப்போதுமே தூய்மைப் பணியாளர்கள் வேலை பார்த்துக்கொண்டே இருக்க வேண்டியதாக உள்ளது. இந்த சிரமத்தை போக்கவும், சுற்றுலா பயணிகள், பக்தர்கள், குப்பைகளை கீழே வீசாமல் இருக்கவும் முதற்கட்டமாக கோயிலைச் சுற்றி சித்திரை வீதிகளில் இந்த பசுமை மாறா மூங்கில் குப்பை கூடைகள் வைக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மாசி வீதிகளிலும் வைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன. கைகளில் குப்பைகளை கொண்டு வரும் பக்தர்கள், 8 அடிக்கு ஒரு இடத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த குப்பை கூடைகளை பார்த்ததும் குப்பையை கீழ போட அவர்களுக்கு மனசு வராது. அவர்களும் குப்பைகளை போட ரொம்ப தூரம் போக வேண்டிய அவசியம் இல்லை. மாநகராட்சி ஆணையரின் இந்த திட்டத்தால் தற்போது சித்திரை வீதிகள் சுத்தமாக காணப்படுகின்றன. அது போல், ஒவ்வொரு கோபுரம் அருகேயும் பச்சை பெட்டிகள் வைத்துள்ளோம். அதில் பிளாஸ்டிக் மற்றும் சில மறுசுழற்சி செய்ய முடியாத குப்பைகளை போடலாம். இந்த குப்பைக் கூடைகளில் சேரும் குப்பைகளை தூய்மைப் பணியாளர்கள் உடனுக்குடன் சேகரிப்பதற்கு மிக எளிமையாகவும் உள்ளது.'' என்றார்.

மாண்புமிகு உட்கோட்ட நடுவர்
நீதிமன்றம் மற்றும் வருவாய்
கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண்.1548/2025/ஆ2

R.பரஞ்ஜோதி, க/பெ.ரெங்கசாமி
72,S.கோபாலபுரம் கிராமம்
டி.புதுப்பட்டி, திருமங்கலம் வட்டம்
மதுரை மாவட்டம்.
------ மனுதாரர்
--- எதிர் ---
உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர்
அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
திருமங்கலம், மதுரை மாவட்டம்.
------------- எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான், எனது தாயார் வெங்கிட்டம்மாள், க/பெ.வெங்கட்ராமு என்பவர் கடந்த 15.05.1987-ம் தேதி திருமங்கலம் வட்டம், டி.புதுப்பட்டி, S.கோபாலபுரம் கிராமத்தில் உள்ள வீட்டில் வைத்து இறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது.இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30தினங்களுக்குள் காலை 11.00மணிக்கு மேற்படி கனம் திருமங்கலம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
R.பரஞ்ஜோதி
S.கோபாலபுரம்.

மாவட்ட வருவாய் கோட்டாட்சியர்
நீதிமன்றம், இராமநாதபுரம்
ந.க.அ7 /3305 / 2025

பூமிநாதன்
த/பெ.காளிமுத்து (லேட்)
இலுப்பக்குடி கிராமம்.
நெய்வயல் அஞ்சல்.
திருவாடானை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
... மனுதாரர்
-எதிர்-
வட்டாட்சியர் அவர்கள்,
திருவாடானை.
.. எதிர்மனுதாரர்

அறிவிப்பு

எனது தகப்பனார் காளிமுத்து தேவர் என்பவர் கடந்த 16.06.2000-ம் தேதி அன்று மேற்படி முகவரியிலுள்ள எனது வீட்டில் இயற்கை மரணம் அடைந்தார் எனது தந்தையின் இறப்பை பதிவு செய்யக்கோரி இராமநாதபுரம், மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10.00 மணியளவில் இன்னும் 10 நாட்களுக்குள் நேரில் வந்து ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் இம்மனு ஒரு தலை பட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

பூமிநாதன்
மனுதார்.

உட்கோட்டம் நிர்வாக
நடுவர் நீதிமன்றம் மற்றும்
பழனி வருவாய்
கோட்டாட்சியர்
அலுவலகம், பழனி

நாராயணசாமி (70/2025)
த-பெ. லேட்.
பழனியப்பகவுண்டர்
க.எண்.1/7, வலையபட்டி,
வலையபட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.
......மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய நான், எனது பாட்டி (தந்தையின் தாயார்) பாராயம்மாள் க/பெ கந்தசாமிகவுண்டர் அவர்கள் கடந்த 24.01.1986-ம் தேதி அன்று, மேற்படி மனுதாரராகிய எனது மேற்படி முகவரி இல்லத்தில் இறந்ததை அறியாமையின் காரணமாக உரிய அலுவலகத்தில் பதிவு செய்ய தவறிவிட்டேன். தற்சமயம் உட்கோட்ட நிர்வாக நடுவர் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நீதிமன்றத்தில் பதிவு செய்ய வேண்டி மனுத் தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15 தினங்களுக்குள் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தல் (பழனி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்) நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி மனு ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர் :-
நாராயணசாமி
த-பெ.
லேட்.பழனியப்பகவுண்டர்
க.எண்.1/7, வலையபட்டி,
வலையபட்டி கிராமம்,
ஒட்டன்சத்திரம் தாலுகா,
திண்டுக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மொத்த தொகை – ஒப்பந்த முறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.03/2025–2026/க.பொ/க(க&ப)வட்டம்/ சேலம்/ நாள்.21.04.2025.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்–7 அவர்களால் பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்கண்ட பணிக்கு இணைய வழி மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மின்னணு ஒப்பந்தப்புள்ளியை "https://tntenders.gov.in" என்ற இணையதளத்தில் 24.04.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 09.05.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவிறக்கம் செய்த ஒப்பந்தப்புள்ளியை 09.05.2025 பிற்பகல் 3.00 மணிக்குள் இணைய வழி மூலம் "https://tntenders.gov.in" பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 09.05.2025–ல் பிற்பகல் 3.30 மணிக்கு இணைய வழி மூலம் "https:// tntenders.gov.in" திறக்கப்படும்.

| வ. எண். | வேலையின் பெயர் | தோராய மதிப்பீட்டுத் தொகை (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூ) | பணி முடிக்க நிர்ணயிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் பதிவுத் துறைக்கு ஒருங்கிணைந்த அலுவலக கட்டடம் கட்டும் பணி | ரூ.398.21 | 2,10,000/– | 330 நாட்கள் |

| | |
|---|---|
| ஒப்பந்ததாரர் வகுப்பு | பொதுப்பணித்துறையில் ஒப்பந்ததாரராக வகுப்பு–III-ல் மாநில அளவில் / இவ்வட்ட அளவில் (ரூ.2.00 கோடி முதல் ரூ.5.00 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் |
| முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய அலுவலர் விவரம் | முன் வைப்புத் தொகையை இணையதளம் மூலம் மட்டுமே செலுத்தலாம். |

பணியின் பெயர், முன் வைப்புத் தொகை செலுத்த வேண்டிய விவரம் மற்றும் இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை அரசு இணையதளத்தில் "https://tntendersgov.in" தெரிந்து கொள்ளலாம். ஒப்நப்தப்புள்ளி நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படின் அது பற்றிய விவரம் வளைத்தளம் "https://tntenders.gov.in"–ல் பதிவேற்றம் செய்யப்படும்.

கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,
கட்டடம் (க&ப) வட்டம், சேலம்–7

செ.ம.தொ.இ/1665/ஒப்பந்தப்புள்ளி/2025

## அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யானார் மற்றும் பத்திரகாளியம்மன் திருக்கோயில் - மடப்புரம் - திருப்புவனம் வட்டம் சிவகங்கை மாவட்டம்

ந.க.அ.எண்.3/2025/அ2 நாள்:23.04.2025

**பொதுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டாம் அழைப்பு)**

மறுபொது ஏலம்/மறுஒப்பந்தப்புள்ளி நாள் நேரம் - 16.05.2025ம் தேதி பகல் 12.00 மணி
நடைபெறும் இடம் - திருக்கோயில் ஓம்சக்தி மண்டபம்
உரிமம் காலம் - பசலி1435 (01.07.2025 முதல் 30.06.2025 முடிய)

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கீழ்கண்ட உரிமங்கள் திருக்கோயில் ஓம்சக்தி மண்டபத்தில் வைத்து சிவகங்கை இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் உதவி ஆணையர்/செயல் அலுவலரால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடத்தப்படும்.

| வ. எண். | உரிமம் இனம் | காலம் | ஏல டெபாசிட் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை |
|---|---|---|---|---|---|
| 1 | பிரசாதம் தயாரித்து விற்பனை செய்யும் உரிமம் | 01.07.2025 முதல் 30.06.2025 முடிய | 10,00,000.00 | 10,00,000.00 | 1,000.00 |
| 2 | முடிசேகரம் செய்யும் உரிமம் | 01.07.2025 முதல் 30.06.2025 முடிய | 10,00,000.00 | 10,00,000.00 | 1,000.00 |

ஏல நிபந்தனைகளை http://madapuramayyanar.hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் அல்லது அலுவலக நேரத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

திரு. டி.சங்கர் பி.எஸ்.சி.பி.எல்.,
தக்கர்/துணை ஆணையாளர்/சரிபார்ப்பு

திரு.கணபதிமுருகன் எம்.ஏபி.எல்
உதவி ஆணையாளர்/செயல்அலுவலர்

வி.வெ.ஆ.எண்:52/2025/செமதொஅ/சிவகங்கை. நாள்:23.04.2025

### ஐ.பி.எல். கிரிக்கெட்டில்

# விரைவாக 5,000 ரன்கள்: கே.எல்.ராகுல் சாதனை



**லக்னோ, ஏப்.24-**

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 5,000+ ரன்களை விரைவாக எட்டிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார் இந்தியாவின் கே.எல்.ராகுல். லக்னோ அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்த சாதனையை அவர் படைத்தார்.

**5,000+ ரன்கள்...**

நடப்பு சீசனில் டெல்லி கேபிடல்ஸ் அணியில் விக்கெட் கீப்பர் பேட்ஸ்மேனாக ராகுல் விளையாடி வருகிறார். தனது 130-வது ஐ.பி.எல். இன்னிங்ஸில் 5,000+ ரன்களை அவர் எட்டினார். இதற்கு முன்பு 135 ஐ.பி.எல். இன்னிங்ஸில் 5,000+ ரன்களை எட்டியிருந்தார் ஆஸ்திரேலியாவின் டேவிட் வார்னர். தற்போது வார்னர் சாதனையை ராகுல் முந்தியுள்ளார்.

**8-வது வீரர்...**

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 5,000+ ரன்களை கடந்த 8-வது பேட்ஸ்மேனாக ராகுல் அறியப்படுகிறார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அதிக ரன்கள் எடுத்த பேட்ஸ்மேன்களில் 8,326 ரன்களுடன் கோலி முதலிடத்தில் உள்ளார். லக்னோ உடனான ஆட்டத்தில் 42 பந்துகளில் 57 ரன்கள் எடுத்தார் ராகுல். இதுவரை ஹைதராபாத், பெங்களூரு, பஞ்சாப் மற்றும் லக்னோ அணிகளில் ராகுல் விளையாடி உள்ளார். தற்போது டெல்லி அணிக்காக விளையாடி வருகிறார்.

**5,006 ரன்கள்...**

கடந்த 2013-ம் ஆண்டு சீசன் முதல் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் அவர் விளையாடி வருகிறார். 130 இன்னிங்ஸில் விளையாடி 5,006 ரன்கள் எடுத்துள்ளார். 40 அரை சதம், 4 சதம் விளாசி உள்ளார். பேட்டிங் சராசரி 46.35. ஸ்ட்ரைக் ரேட் 135. 425 போர்கள், 203 சிக்ஸர்கள் விளாசி உள்ளார்.

**குறைந்த இன்னிங்ஸில் 5,000 ரன்கள்:**

1) கே.எல்.ராகுல் - 130 இன்னிங்ஸ்.
2) டேவிட் வார்னர் - 135 இன்னிங்ஸ்.
3) விராட் கோலி - 157 இன்னிங்ஸ்.
4) ஏபி டிவில்லியர்ஸ் - 161 இன்னிங்ஸ்.
5) ஷிகர் தவாண் - 168 இன்னிங்ஸ்.

# ராகுல், பொரெல் அதிரடியால் டெல்லிக்கு 6-வது வெற்றி

### லக்னோ சூப்பர் ஜயன்ட்ஸை வீழ்த்தியது



**லக்னோ, ஏப்.24-**

ஐ.பி.எல். போட்டியின் 40-ஆவது ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் லக்னோ சூப்பர் ஜயன்ட்ஸை அதன் சொந்த மண்ணில் செவ்வாய்க்கிழமை வீழ்த்தியது.

**லெவனில் மாற்றமில்லை...**

முதலில் லக்னோ 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 159 ரன்கள் எடுத்தது. அடுத்து டெல்லி 17.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழந்து 161 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற டெல்லி, பந்துவீச்சை தேர்வு செய்தது. டெல்லி லெவனில் மோஹித் சர்மா இடத்தில் துஷ்மந்தா சமீரா சேர்க்கப்பட்டார். லக்னோ லெவனில் மாற்றமில்லை.

**மார்க்ரம் அதிரடி...**

லக்னோ இன்னிங்ஸை தொடங்கிய எய்டன் மார்க்ரம் - மிட்செல் மார்ஷ் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 87 ரன்கள் சேர்த்தது. இந்த ஜோடியை துஷ்மந்தா சமீரா 10-ஆவது ஓவரில் பிரித்தார். 33 பந்துகளில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 52 ரன்கள் சேர்த்த மார்க்ரம் ஆட்டமிழந்தார். ஒன் டவுனாக வந்த அதிரடி வீரர் நிகோலஸ் பூரன், 2 பவுண்டரிகளுடன் 9 ரன்களுக்கு பௌல்டானார். அடுத்து வந்த அப்துல் சமதும் 2 ரன்களுக்கு நடையைக் கட்ட, சற்று நிதானமாக விளையாடி வந்த மிட்செல் மார்ஷ் 36 பந்துகளில் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 45 ரன்களுக்கு பௌல்டானார்.

5 மற்றும் 6-ஆவது பேட்டர்களாக களம் புகுந்த டேவிட் மில்லர் - ஆயுஷ் பதோனி, விக்கெட் சரிவை சற்று கட்டுப்படுத்தி 5-ஆவது விக்கெட்டுக்கு 49 ரன்கள் சேர்த்தனர். பதோனி 6 பவுண்டரிகள் உள்பட 36 ரன்களுக்கு கடைசி ஓவரில் ஸ்டம்ப்பை பறிகொடுத்தார். தொடர்ந்து வந்த கேப்டன் ரிஷப் பந்தும் ரன்னின்றி அதே விதியைச் சந்தித்தார். ஓவர்கள் முடிவில் லக்னோ சூப்பர் ஜயன்ட் அணி 159 ரன்கள் எடுத்திருந்தது. டேவிட் மில்லர் 1 பவுண்டரியுடன் 14 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார். டெல்லி தரப்பில் முகேஷ் குமார் 4, மிட்செல் ஸ்டார்க், துஷ்மந்தா சமீரா ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.

**வெற்றிக்கு அடித்தளம்...**

அடுத்து, 160 ரன்களை நோக்கி விளையாடிய டெல்லி அணியில் கருண் நாயர் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 15 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். ஒன் டவுனாக வந்த கே.எல்.ராகுல், தொடக்க வீரர் அபிஷேக் பொரெலுடன் இணைந்தார். இந்த ஜோடி 2-ஆவது விக்கெட்டுக்கு 69 ரன்கள் சேர்த்து வெற்றிக்கு அடித்தளமிட்டது. இதில் பொரெல் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 51 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார்.


**டெல்லி வெற்றி...**

அடுத்து வந்த கேப்டன் அக்ஸர் படேல், ராகுலுடன் இணைந்தார். டெல்லியை வெற்றிக்கு வழிநடத்திய இந்த ஜோடியில், ராகுல் 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 57, படேல் 1 பவுண்டரி, 4 சிக்ஸர்களுடன் 34 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர். லக்னோ பௌலிங்கில் எய்டன் மார்க்ரம் 2 விக்கெட்டுகள் எடுத்தார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 8 | 6 | 2 | 12 | +1.104 |
| 2 | டெல்லி | 8 | 6 | 2 | 12 | +0.657 |
| 3 | பெங்களூரு | 8 | 5 | 3 | 10 | +0.472 |
| 4 | பஞ்சாப் | 8 | 5 | 3 | 10 | +0.177 |
| 5 | லக்னோ | 9 | 5 | 4 | 10 | +0.054 |
| 6 | மும்பை | 8 | 4 | 4 | 8 | +0.483 |
| 7 | கொல்கத்தா | 8 | 3 | 5 | 6 | +0.212 |
| 8 | ராஜஸ்தான் | 8 | 2 | 6 | 4 | -0.633 |
| 9 | ஐதராபாத் | 7 | 2 | 5 | 4 | -1.217 |
| 10 | சென்னை | 8 | 2 | 6 | 4 | -1.392 |


## இன்றைய ஐ.பி.எல் (42-வது லீக்)



**அணிகள் - பெங்களூரு vs ராஜஸ்தான்**

**இடம் - பெங்களூரு மணி - இரவு 7.30**

## ஐ.பி.எல். குறித்து திலக் வர்மா



நடப்பு ஐபிஎல் தொடரில் தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடைபெறும் லீக் சுற்றின் 41-வது போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் விளையாடின. இந்தப் போட்டிக்கு முன்னதாக, மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் திலக் வர்மா தனியார் தொலைக்காட்சி சிறப்பு நிகழ்ச்சியில் பேசுகையில், நான் ரோஹித் சர்மாவுக்கும் சூர்யகுமார் யாதவுக்கும் அடிக்கடி சொல்வது ஒன்றுதான். நான் இன்னும் கோப்பை வென்ற உணர்வை அனுபவிக்கவே இல்லை. இந்த ஆண்டு நாங்கள் முழு மனதோடு போராட தயாராக இருக்கிறோம்.

ஹார்திக் பாண்டியா உடன் நல்ல நட்புறவு இருக்கிறது. டி20 அறிமுகத்தின் போது அவரிடமிருந்து தொப்பியைப் பெற்றது மறக்கமுடியாத தருணம். நான் 2022 ஆம் ஆண்டில் மும்பை இந்தியன்ஸில் சேர்ந்தேன். இது எனக்கு நான்காவது சீசன். பல மூத்த வீரர்களுடனும், உள்நாட்டு வீரர்களுடனும் விளையாடும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அது நம்பிக்கையை அதிகரிக்கிறது. ஐ.பி.எல்.லில் சர்வதேச தரத்தில் இருக்கும் பலரை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இது சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவதற்கு பயனுள்ளதாக இருக்கிறது என்றார்..

## பஹல்காம் சம்பவம் குறித்து கோலி

ஜம்மு-காஷ்மீரின் பெஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாதிகள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடத்திய கொடூர துப்பாக்கிச் சூடு தாக்குதலில் 2 வெளிநாட்டினர் உள்பட 28 பேர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். இதற்கு அரசியல் கட்சித் தலைவர்களும், நடிகர்கள், கிரிக்கெட் வீரர்கள் உள்ளிட்டோர் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இரங்கல்களையும், தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடும் கண்டனத்தையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி தன்னுடைய இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் இந்தத் தாக்குதல் குறித்து பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்தப் பதிவில், "பெஹல்காம் தீவிரவாத தாக்குதலில் அப்பாவி மக்கள் உயிரிழந்த செய்தி வேதனையளிக்கிறது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு அமைதியும், வலிமையும் கிடைக்க வேண்டும் எனவும் இந்த கொடூர செயலுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்" எனப் பதிவிட்டுள்ளார். இதேபோன்று இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் பகிர்ந்துள்ள பதிவில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் நினைத்துக் கூட பார்க்க முடியாத வேதனையை அனுபவித்து வருகின்றனர். இந்த மாதிரியான நேரத்தில் நாம் அவர்களுடன் துணை நிற்க வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.பி.எல்: பட்டாசுகள் வெடிக்க தடை

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் சுற்றுலா பயணிகளை குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த கொடூர தாக்குதலுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அந்தவகையில், ஐ.பி.எல். தொடரில் ஐதராபாத்தில் நேற்று நடைபெற்ற மும்பை - ஐதராபாத் இடையிலான லீக் ஆட்டத்தின் போது பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் பலியானதற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வீரர்கள், நடுவர்கள் என அனைவரும் கைகளில் கருப்பு பட்டை அணிந்து பங்கேற்க வேண்டும் என பி.சி.சி.ஐ அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த போட்டியின் போது, சியர்லீடர்கள் நடனமாடக் கூடாது எனவும், பட்டாசுகள் வெடிக்கக்கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர் ஒரு நிமிட மவுன அஞ்சலி செலுத்த வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## இலங்கை மகளிர் அணி அறிவிப்பு

இந்தியா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ஒருநாள் தொடர் இலங்கையில் நடைபெற உள்ளது. இந்த தொடர் வரும் 27ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரின் அனைத்து ஆட்டங்களும் கொழும்புவில் நடக்கிறது. இந்த தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியில் விளையாடும்.

இந்நிலையில், இந்த தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு சமாரி அத்தபத்து கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அணி விவரம்: சமாரி அத்தபத்து (கேப்டன்), விஷ்மி குணரத்னே, ஹர்ஷிதா சமரவிக்ரமா, நிலாக்ஷி சில்வா, கவிஷா தில்ஹாரி, அனுஷ்கா சஞ்சீவனி, ஹாசினி பெரேரா, பியூமி வத்சலா, மனுடு நாணயக்காரா, டெவ்மி விஹங்கா, இனோகா ரனவீரா, இனோஷி பெர்னாண்டோ, ஹன்சிமா கருணாரத்னே, ராஷ்மிகா செவ்வந்தி, மல்கி மதரா, சுகந்திகா குமாரி, அச்சினி குல்சூரியா.

### விஸ்டன் சாதனை புத்தகத்தில் இடம்:

## பும்ரா, மந்தனாவுக்கு கவுரவம்

**புதுடெல்லி, ஏப்.24-**

விஸ்டன் சாதனை புத்தகத்தில் பும்ரா, மந்தனா இடம்:பெற்றுள்ளனர்.

**கிரிக்கெட் உலகின் பைபிள்...**

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து வெளியாகும் 'கிரிக்கெட் உலகின் பைபிள்' என்று போற்றப்படும் 'விஸ்டன்' புத்தகம் ஆண்டுதோறும் சிறந்த 5 வீரர்களை தேர்வு செய்து அவர்களது சாதனை விவரங்களை வெளியிட்டு கவுரவிப்பது வழக்கமாகும். இதில் இங்கிலாந்து மண்ணில் நடைபெறும் போட்டிகளில் சிறப்பாக செயல்படும் வீரர், வீராங்கனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**ஜஸ்பிரித் பும்ரா...**

இதன்படி 2025-ம் ஆண்டு பதிப்பில் இடம் பெறும் சிறந்த 5 வீரர், வீராங்கனைகள் யார் என்பதை 'விஸ்டன்' வெளியிட்டுள்ளது. இதில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, இந்திய பெண்கள் அணியின் துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளது. 31 வயதான பும்ரா கடந்த ஆண்டில் (2024) டெஸ்ட் கிரிக்கெட்டில் 71 விக்கெட்டுகளை வீழ்த்தியது. இதில் சராசரியாக 14.92 ரன்னுக்கு ஒரு விக்கெட் சாய்த்து இருந்தார். ஒரு சீசனில் இவ்வளவு குறைவான ரன் சராசரியுடன் அதிக விக்கெட் வீழ்த்திய பவுலராக பும்ரா திகழ்கிறார் என விஸ்டன் பாராட்டி இருக்கிறது. அத்துடன் அவர் 20 ஓவர் உலகக் கோப்பை போட்டியில் 15 விக்கெட்டுகள் வீழ்த்தி தொடர்நாயகன் விருதை கைப்பற்றியதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**மந்தனா...**

28 வயதான மந்தனா கடந்த ஆண்டில் மூன்று வடிவிலான போட்டியிலும் சேர்த்து 1,659 ரன்கள் குவித்தார். இது, சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு ஆண்டில் வீராங்கனை ஒருவர் எடுத்த அதிகபட்ச ரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அட்கின்சன், விக்கெட் கீப்பர் ஜாமி சுமித், இங்கிலாந்து வீராங்கனை சோபி எக்லெஸ்டோன் ஆகியோரின் பெயரும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளது.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் சிவ் தாஸ் மீனா (ஓய்வு) அண்மையில் தனது மகனுக்கு திருமணமானதையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# சுற்றுலா பயணிகளை அழைத்துவர கூடுதல் விமானங்கள்: மத்திய அமைச்சர் தகவல்

**டெல்லி, ஏப்.24-**

காஷ்மீரில் சிக்கியுள்ள சுற்றுலா பயணிகளை அழைத்துவர கூடுதல் விமானங்கள் இயக்கப்படும் என்று மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம்மோகன் தெரிவித்துள்ளார்

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் நகரின் பைசாரன் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் மதியம் பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதல் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து காஷ்மீரில் இருந்து சுற்றுலா பயணிகள் வெளியேறி வருகின்றனர். இதனால், விமான நிலையங்கள், ரெயில் நிலையங்களில் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் காணப்படுகின்றனர். இந்நிலையில், காஷ்மீரில் சிக்கியுள்ள சுற்றுலா பயணிகளை அழைத்துவர ஸ்ரீநகரில் இருந்து டெல்லி, மும்பைக்கு கூடுதல் விமானங்கள் இயக்கப்படும் என்று மத்திய விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் ராம்மோகன் தெரிவித்துள்ளார். அதே வேளை, விமான நிறுவனங்கள் கூடுதல் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்றும் மத்திய அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

# போக்குவரத்து துறையை மீட்டெடுத்த முதல்வர்: அமைச்சர் சிவசங்கர் பெருமிதம்

**சென்னை, ஏப்.24-**

சீர்கெட்டு கிடந்த போக்குவரத்து துறையை புதிய பேருந்துகள் வாங்கி மீட்டெடுத்து வருகிறார் முதல்வர் என்று போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் நேற்று போக்குவரத்து துறை மீதான மானிய கோரிக்கை விவாதத்தில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதாவது:- பெண்கள் வாழ்க்கையில் விடியல் பயணம் மூலம் மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. பெண்களுக்கு மாதம் ரூ.1,200 சேமிப்பு வருகிறது என தனியார் ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. விடியல் பயணம் அறிவிக்கப்பட்ட 4 ஆண்டுகளில் இதுவரை 670 கோடி பயணம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அடுத்த முறை ஓட்டுனர், நடத்துனர் பணிக்கு தனித்தனியாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும். 1,024 வாரிசுதாரர்களுக்கு இதுவரை பணி வழங்கப்பட்டுள்ளது. 67 பெண் நடத்துனர்களுக்கு அண்மையில் பணி வழங்கப்பட்டுள்ளது. மின்சார பேருந்து வாங்கும் இடத்திலேயே பராமரிப்பு பணியை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் சென்னை மாநகர போக்குவரத்து கழகத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பேருந்துகள் வாங்கப்பட்டுள்ளன. 2025-26 நிதி ஆண்டில் 750 புதிய பேருந்துகள் வாங்க உத்தரவிடப்பட்டுள்ளது. 1,000 பேருந்துகளை சி.என்.ஜி.யாக மாற்றி இயக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பாழ்பட்டு, சீர்கெட்டு கிடந்த போக்குவரத்து துறையை புதிய பேருந்துகள் வாங்கி மீட்டெடுத்து வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின். ஊதிய ஒப்பந்தம் தொடர்பான முதற்கட்ட பேச்சுவார்த்தை முடிந்துள்ளது. போக்குவரத்து தொழிலாளர்களுக்கான கோரிக்கை நிறைவேற்றப்படும். இந்தியாவில் 28% போக்குவரத்து விருதுகளை தமிழ்நாடு போக்குவரத்து கழகம் பெற்றுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# மரணமடைந்த கிராம உதவியாளர்கள் வாரிசுகளுக்கு பணி: அமைச்சர் உறுதி

**சென்னை, ஏப்.24-**

கிராம உதவியாளர்களுக்கு கால முறை ஊதியத்தினை மாற்றுவது குறித்து முதல்வரிடம் பேசி முடிவு எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய, சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, வருவாய் துறையில் 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள் வரையறுக்கப்பட்ட கால முறை ஊதியத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்களாக என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன், "பணி நியமனம் செய்யும் போதே சிறப்பு காலவரைமுறை ஊதியத்தில் தான் பணி நியமனம் செய்துள்ளனர். வருவாய்த்துறையில் மட்டும் அல்ல மற்ற துறைகளிலும் இதே நிலைதான். முதல்வரிடம் பேசி கால முறை ஊதியத்தினை மாற்றுவது குறித்து முடிவு எடுக்கப்படும். இதுவரை கிராம உதவியாளர்கள் மரணம் அடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு பணி வழங்கப்படுது இல்லை. 10 நாட்களுக்கு முன்பாக கிராம உதவியாளர்கள் மரணம் அடைந்தால் அவர்கள் வாரிசுகளுக்கு பணி வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

# காஷ்மீர் தாக்குதல்: அசாம் பயணத்தை ரத்து செய்தார் ஜனாதிபதி முர்மு

**டெல்லி, ஏப்.24-**

காஷ்மீர் தாக்குதலையடுத்து அசாம் பயணத்தை தனது ஜனாதிபதி முர்மு ரத்து செய்தார்.

ஜனாதிபதி திரவுபதி 2 நாட்கள் பயணமாக இன்று அசாம் செல்லவிருந்தார். அவர் நாளை அசாம் தலைநகர் கவுகாத்தியில் உள்ள பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்க திட்டமிட்டிருந்தார். மேலும், மாநில அரசு சார்பில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் பங்கேற்க திட்டமிட்டிருந்தார்.

இதனிடையே, காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் நகரின் பைசாரன் மலைப்பகுதியில் நேற்று முன்தினம் மதியம் பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த பயங்கரவாத தாக்குதல் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று மேற்கொள்ளவிருந்த அசாம் பயணத்தை ரத்து செய்துள்ளார். மேலும், அசாம் பயணம் தொடர்பாக மாற்று தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி மாளிகை தெரிவித்துள்ளது.

# அமித்ஷா பதவி விலக வேண்டும்: திருமாவளவன்

**சென்னை, ஏப்.24-**

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காம் என்ற இடத்தில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை குறிவைத்து திடீர் தாக்குதல் நடத்தினார்கள். இந்த பயங்கரவாதிகளின் தாக்குதலில் மொத்தம் 26 பேர் பரிதாபமாக பலியாகினர். தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் பயங்கரவாதிகளுக்கு எதிராக என்கவுன்ட்டர் வேட்டையில் ராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது பயங்கரவாதிகளை பிடிக்க டிரோன்கள், மோப்ப நாய்கள் உதவியுடன் தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஹெலிகாப்டர்கள் மூலம் மலைப்பகுதிகளில் தீவிர கண்காணிப்பு பணி நடைபெற்று வருகிறது.

இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தான் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தின் லஷ்கர்-இ-தொய்பா இன் பினாமி அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் என்ற அமைப்பு பொறுப்பு ஏற்றுள்ளது. இந்நிலையில் பயங்கரவாத தாக்குதலுக்கு பொறுப்பேற்று அமித்ஷா பதவி விலக வேண்டும் என்று வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "காஷ்மீரில் நடந்த கொடூரம் பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது. உளவுத்துறை தோல்வி அடைந்துள்ளது என்பதைத்தான் இச்சம்பவம் உறுதிபடுத்துகிறது. அங்கு பயங்கரவாதமே இல்லை. சுற்றுலாப் பயணிகள் சுதந்திரமாகப் பயணிக்கலாம் என்ற பா.ஜ.க. அரசின் கூற்றை நம்பிச் சென்றவர்கள் படுகொலையாகி உள்ளனர். எனவே, தாக்குதலுக்கு பொறுப்பேற்று உள்துறை மந்திரி அமித்ஷா தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்" என்று திருமாவளவன் கூறினார்.

## திருமண உதவியாக ரூ.4.25 லட்சம், 8 கிராம் தங்கம் வழங்கல்:

# தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ராமநாதபுரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



ராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண உதவியாக ரூ.4.25 லட்சம் மற்றும் 8 கிராம் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகின்றன. மனவளர்ச்சி குன்றியோர், தசைச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டோர், கடும் ஊனமுற்றோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு சுயதொழில்புரிய மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்கும் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் வாகனம் வழங்கும் திட்டம், கண் பார்வையற்ற மற்றும் காது கேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு விலையில்லா கைபேசி வழங்கும் திட்டம், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், மூன்று சக்கர சைக்கிள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் கை கால் குறைபாடு, காது கேளாதோர், பார்வை இல்லா மாற்றுத்திறனாளிகளை நல்ல நிலையில் உள்ள நபர்கள் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு திருமண உதவித்தொகை தமிழ்நாடு அரசின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. அதன்படி திருமணம் செய்யும் மாற்றுத்திறனாளிகள் டிகிரி முடித்திருந்தால் அவர்களுக்கு ரூ.50ஆயிரம் மற்றும் 8 கிராம் தங்கமும், டிகிரி முடிக்காதவராக இருந்தால் அவர்களுக்கு ரூ.25 ஆயிரம் மற்றும் 8 கிராம் தங்கமும் வழங்கப்படும். மேலும் மாற்றுத்திறனாளி நபரை ஒரு மாற்றுத்திறனாளி திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு ரூ.50ஆயிரம் மற்றும் 8 கிராம் தங்கமும் வழங்கப்படும்.

திருமண உதவித்தொகைக்கான ரொக்கப்பணம் அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படும். 8 கிராம் தங்கம் சம்பந்தப்பட்ட தம்பதிகளிடம் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகள் திருமண உதவித்தொகை வேண்டி விண்ணப்பிப்பவர்கள் திருமணம் நடைபெற்ற ஓராண்டிற்குள் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் 2024 ஏப்ரல் முதல் தற்போது வரை 11 மாற்றுத்திறனாளிகளுக்கு திருமண உதவித்தொகையாக ரூ.4லட்சத்து 25ஆயிரமும், 88 கிராம் தங்க நாணயமும் வழங்கப்பட்டுள்ளது. திருமண உதவித்தொகை அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த பயனாளி முதுகுளத்தூரை சார்ந்த ஜெயலெட்சுமி க/பெ.காளீஸ்வரன், மாவட்ட கலெக்டரிடம் தெரிவிக்கையில், நான் ஒரு மாற்றுத்திறனாளி. எனது நிலையை எண்ணி மிகவும் மனம் உடைந்து வாழ்ந்து வந்தேன். நான் சிவகங்கையைச் சேர்ந்த காளீஸ்வரன் என்பவரை திருமணம் செய்து கொண்டேன். தமிழ்நாடு அரசின் சார்பில் என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் திருமண உதவித்தொகை வழங்கப்படுவது குறித்து என் வீட்டின் அருகில் வசிப்பவர்கள் எடுத்துக் கூறினார்கள். இது தொடர்பாக அருகில் உள்ள மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை அணுகினேன். எனது நிலைமையை அறிந்து அலுவலர்கள் என்னிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண உதவித்தொகை எனக்கு கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

தற்போது எனக்கு மாற்றுத்திறனாளி திருமண உதவித்தொகை ரூ.25ஆயிரம் ரொக்கம் எனது வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 8 கிராம் தங்க நாணயம் பெற்றுக் கொண்டேன். இத்திட்டத்தின் மூலம் என்னைப் போன்ற மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## நத்தம் அருகே தி.மு.க. வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டம்

**நத்தம், ஏப். 24-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே வத்திபட்டியில் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடந்தது. இதற்கு தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டி அம்பலம், வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி பேரூராட்சி தலைவர் சேக் சிக்கந்தர் பாட்சா, நகர செயலாளர் ராஜ்மோகன், மாநில பொதுக்குழு உறுப்பினர் முத்துக்குமார் சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் வருகிற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பெயர் சேர்த்தல், நீக்கல் போன்ற பணிகளை பூத்வாரியாக செய்திடவும், பூத் கமிட்டி அமைப்பது சம்பந்தமாகவும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் நத்தம் தொகுதி பொறுப்பாளர் ரஞ்சன்துரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பவுர் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மதுரைமாநகர் மத்திய 4-ம் பகுதி அ.தி.மு.க. செயலாளராக பொறுப்பேற்ற எம்.ரவிராஜ் நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார்.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெடிவிபத்தில் மரணமடைந்த நபர்களின் வாரிசுதார்களுக்கு ரூ.4 லட்சமும் மற்றும் வெடிவிபத்தில் காயமடைந்த நபர்களுக்கு ரூ.1 லட்சமும் என மொத்தம் ரூ.5 லட்சம் மதிப்பில், முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் வழங்கினார்.



ஊட்டச்சத்து குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் திருமங்கலம் அரசு ஹோமியோபதி மருத்துவக்கல்லூரி தேசிய நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் 90 பேர் பங்கேற்ற இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை கல்லூரி என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எம்.யுவராஜ் துவக்கி வைத்தார்.

## ஒட்டன்சத்திரத்தில் வேளாண்மை கண்காட்சி



**ஒட்டன்சத்திரம், ஏப்.24-**

தேனி மாவட்டம் குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரியில் விவசாயம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர்கள் ஆகாஷ், அமல், பரணிஸ்வரன், கௌதம், ஹரிராம், ஜீவா, மதன்குமார், பொன்கிஷோர், சுதிப், ஸ்ரீ ஹரி, விஜயராகவன் ஆகியோர் கிராம தங்கள் திட்டத்திழ் ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் களப்பணியாற்றி வருகின்றனர்.

பொறுப்பு ஆசிரியர்கள் கோகுலகிருஷ்ணன், தீபிகா ஆலோசனையில் பேரில் நடை பெற்றவேளாண் கண்காட்சியில் விவசாயிகளுக்கு வேளாண்மை துறையில் நவீனப்படுத்தப்பட்ட வேளாண்மை முறைகள் மற்றும் சத்துள்ள பொருட்கள் விளைவிப்பது, சோலார் ஒலி மூலம் மின்சாரம் தயாரிப்பது, உழவன் செயலியை கையாளும் முறை ,சூரிய சக்தி நீர்ப்பாசன அமைப்பின் நன்மைகள் குறித்தும்,மதிப்பு கூட்டும் பொருட்கள் குறித்தும்,ஒருங்கிணைந்த பண்ணை முறை குறித்தும்,கோழி வளர்ப்பு, தேனி வளர்ப்பு பற்றி சாதனங்கள் கையாளுவது, பாலிஹவுஸ், செங்குத்து விவசாயம், தென்னையில் முக்கோண விவசாயம், காளான் வளர்ப்பு ,இயற்கை முறையில் தயாரித்த பஞ்சகவ்யா, மீன் அமிலம் குறித்து மாணவர்கள் கண்காட்சிக்காக வைத்திருந்தனர். கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மாணவர்கள் நவீன மேலாண்மை முறைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

## மேலூரில் இதயம் ஹோட்டல்:

# முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன் திறந்து வைத்தார்



**மேலூர், ஏப்.24-**

மேலூர் பஸ் நிலையம் வளாகத்தில் புதிதாக இதயம் உயர்தர சைவ உணவகத்தினை மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவைசெயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ கே.தமிழரசன் ரிப்பன்வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

விழாவில் கிராம அம்பலகாரர்கள், மாவட்ட அவைத்தலைவர் எஸ்.என். ராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் அம்பலம், மேலூர் முன்னாள் யூனியன் சேர்மன் பொன்னுச்சாமி, கொட்டாம்பட்டி முன்னாள் யூனியன் சேர்மன் வெற்றிச்செழியன்,

மேலூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பொன் ராஜேந்திரன், கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் குலோத்துங்கன், தி.மு.க. பிரமுகர்கள் துரை, செல்வம், அரசு வழக்கறிஞர் எழிலரசன், வழக்கறிஞர் கண்ணன் மற்றும் தவபாண்டி, ஜெயபால், மீரா உசேன், அன்புச்செல்வன், மனோகரன், சந்திரன், சந்தனம், பூபதி, விஜயா அர்ச்சுணன், பாஜக மதுரை கிழக்கு மாவட்ட தலைவர் ராஜசிம்மன், முன்னாள் மண்டல் தலைவர் சேவுகமூர்த்தி,

அ.ம.மு.க. மேலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சோமாசி, நகர் செயலாளர் ஆனந்த், ராசு என்ற ராஜேந்திரன், செல்வம், சலுகை என்ற மந்தையன் மற்றும் தொழில் அதிபர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், த.வெ.க கட்சி மனோஜ் குமார், சந்திரசேகர், அரசியல் கட்சி பிரமுகர்கள், வர்த்தக சங்கம், அ.தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கடையின் உரிமையாளரும், நகர் மன்ற உறுப்பினருமான திவாகர் தமிழரசன் நன்றி கூறினார்.

## திருமங்கலம் அரசு மருத்துவமனையில்

# கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் சிகிச்சைக்கு நவீன சீமாங் சென்டர் கட்டிடத்திற்கு பூமி பூஜை



**திருமங்கலம், ஏப்.24-**

மதுரை மாவட்டம்,திருமங்கலம் அரசு மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகள் பயன் பெற்றிடும் வகையில் ரூ.5.50 கோடி செலவில் அதி நவீன வசதிகளுடன் 24 மணி நேரமும் செயல்படும் புதிய சீமாங் சென்டர் கட்டுவதற்கான பணிகள் பூமி பூஜையுடன் துவங்கியது.

மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி, திருமங்கலம் மற்றும் மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சீமாங் சென்டர்கள் செயல்பட்டு வருகிறது. தாய், சேய் மரணங்களைத் தடுக்க கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இருந்து பரிந்துரைக்கப்படும் கர்ப்பிணி பெண்களின் சிக்கலான மகப்பேறு பிரசவங்களுக்கு 24 மணி நேரமும் சிகிச்சை அளிக்க இந்த சீமாங் சென்டர்களில் மருத்துவர்கள், செவலியர்கள் பணியில் உள்ளனர்.

இந்த திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து தமிழகத்தில் அனைத்து மாவட்ட ங்களிலும் செயல்படுத்தி வருகின்றன.இந்த சீமாங் சென்டர்களில் சிசு நல தீவிர சிகிச்சைப் பிரிவு வார்டும் இணைந்து செயல்பட்டு வருகிறது. பிரசவ வார்டில் குழந்தை பிறந்தது ஆபத்தான நிலையில் இருந்தால் இந்த வார்டுக்கு மாற்றப்படுவது வழக்கம். இந்த வார்டில் பிரத்யேக இன்குபேட்டர், வென்டிலேட்டர், வார்மர் உள்ளிட்ட நவீன மருத்துவ சாதனங்கள் பயன்பாட்டில் இருக்கும்.

இந்நிலையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் பயன் பெற்றிடும் வகையில் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் திருமங்கலம் அரசு மருத்துவமனை வளாகத்தில் அதி நவீன மருத்துவ வசதிகளுடன் 24 மணி நேரமும் செயல்படக் கூடிய சீமாங் சென்டரின் கட்டுமான பணிகள் நேற்று காலை பூமி பூஜையுடன் துவங்கியது.

இந்நிகழ்வினில் திருமங்கலம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் ராம்குமார், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு. ரம்யா முத்துக்குமார், நகராட்சி கவுன்சிலர்கள் சின்னச்சாமி, வீரக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தனர்.35 படுக்கை வசதியுடன் கூடிய இந்த பிரிவில் கர்ப்பிணி பெண்களுக்கான சிறப்பு சிகிச்சை பிரிவு, அதி நவீன அறுவை சிகிச்சை அரங்குகள், இன்குபேட்டர், வென்டிலேட்டர், வார்மர் உள்ளிட்ட சிசுக்கள் பராமரிப்பு சிகிச்சை பிரிவு மற்றும் அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பராமரிப்பு பிரிவு என பல்வேறு வசதிகள் இந்த சீமாங் சென்டரில் அமையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வினில் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுப்பணி துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## கல்லூரிக்கனவு விழிப்புணர்வு நெடுந்தூர ஓட்டம் தேதி மாற்றம்: கலெக்டர் தகவல்

**விருதுநகர், ஏப்.24-**

விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் வரும் 27-ம் தேதி நடைபெற இருந்த கல்லூரிக்கனவு விழிப்புணர்வு நெடுந்தூர ஓட்டம் மே 1-ம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியுள்ள மாணவர்கள் 100 விழுக்காடு உயர்கல்விச் சேர்க்கையை வலியுறுத்தி நடைபெறும், இந்த நெடுந்தூர ஓட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும், மெட்ரிக், சிபிஎஸ்இ பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதியுள்ள அனைத்து மாணவ, மாணவிகளும் கலந்து கொள்ளலாம்.

ஏற்கனவே பதிவு செய்த மாணவ, மாணவிகளோடு புதியதாக பதிவு செய்பவர்களும் கலந்து கொள்ளலாம். மே 1-ம் தேதி அன்று காலை 5 மணியளவில் நேரடியாகவும் கலந்து கொள்ளலாம். கலந்து கொள்ளும் முதல் 1000 மாணவ, மாணவிகளுக்கு டி-சர்ட் பரிசாக வழங்கப்படும். மேலும் முதல் பரிசு ரூ.40,000, இரண்டாம் பரிசு ரூ.30,000, மூன்றாம் பரிசு ரூ.15,000, நான்காம் பரிசு - ரூ.10,000, ஐந்தாம் பரிசு - ரூ.5,000 வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு 9698810699 என்ற கைப்பேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

## நத்தம் அருகே புறம்போக்கில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றம்

**நத்தம், ஏப்.24-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே முளையூர் கிராமத்தில் அரசு புறம்போக்கு தரிசு நிலத்தில் தனி நபர் ஒருவர் கம்பி வேலிகள் வைத்து ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை ஐகோர்ட் கிளையில் வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த நீதிமன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்துறைக்கு உத்தரவிட்டது. இதையடுத்து நேற்று தாசில்தார் பாண்டியராஜ் மேற்பார்வையில் போலீசார் பாதுகாப்புடன் அரசு புறம்போக்கு தரிசு நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்புகள் ஜே.சி.பி இயந்திரம் மூலம் அகற்றபட்டது. இது மேலும் யாரேனும் ஆக்கிரமிப்பு செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கையும் விடப்பட்டது.இதில் மண்டல துணை வட்டாட்சியர் சுந்தர பாண்டியன், கிராம நிர்வாக அலுவலர் கொண்டல்ராஜ் உள்ளிட்ட வருவாய்த்துறையினர், போலீசார்கள் உடனிருந்தனர்.

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நீர் மோர் பந்தல் திறப்பு




**திருமங்கலம், ஏப்.24-**

தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது உத்தரவின் பேரில் மாநிலம் முழுவதிலும் பொதுமக்களின் தாகம் தீர்த்திடும் வகையில் நீர் மோர் பந்தல்களை தி.மு.க.வினர் திறந்து சேவை செய்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி 98 வது வார்டில் பொது மக்களின் தாகம் தீர்த்திடும் வகையில் மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் வழிகாட்டுதலின் பேரில் நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

அப்போது இளநீர், மோர், ரோஸ் மில்க் சர்பத், தண்ணீர் பழம், தூய குடிநீர் போன்றவை மதுரைதெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.விமல் ஏற்பாட்டில் வடக்கு பகுதி கழக செயலாளர் கிருஷ்ண பாண்டியன், மேற்கு மண்டல தலைவர் வி.சுவிதா விமல் மற்றும் வட்டக் கழக செயலாளர் எம்.ஆர்.பி. ஆறுமுகம் ஆகியோரது தலைமையில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

அப்போது மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தென்பழஞ்சி சுரேஷ் நிர்வாகிகள் டிப்போ ரவி, இயேசு, நீதிமன்னன், முத்து என்ற ரமேஷ், கவிஞர் ஜீவா, கூடல் ராஜேஷ், ஆண்டி செவன் ஸ்டார் செல்வி, மகளிர் அணி பரமேஸ்வரி, மாணவர் அணி பூட்டோ உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் 2025-2026-ம் ஆண்டிற்கான போக்குவரத்துத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி 2025-2026-ம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக நேற்று சந்தித்து வாழ்த்து பெற்றார்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் மதுரை மாநகர் மேற்கு 2-ம் பகுதி அ.தி.மு.க. செயலாளராக பொறுப்பேற்ற ஏ.தங்கப்பாண்டி நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார்.



● சென்னையில் நேற்று சட்டமன்ற பேரவையில், மத்திய அரசின் குடிமைப்பணி தேர்வில் தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாணவர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளது குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

பஹல்காம் தாக்குதல் எதிரொலி:

# பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்தை மூட மத்திய அரசு முடிவு?

புதுடில்லி, ஏப். 24-

பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை திரும்பப் பெற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் நேற்று முன்தினம் (செவ்வாய்க் கிழமை) நடந்த பயங்கரவாத தாக்குதலில் சுற்றுலாப் பயணிகளாகச் சென்ற பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 26 பேர் பலியாகியுள்ளனர். இதில் 2 பேர் வெளிநாட்டவர்கள். இந்தத் தாக்குதல் தொடர்பாக மத்திய அரசு பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகிறது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ஜம்மு-காஷ்மீருக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தார்.

பிரதமர் மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று காலை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை திரும்பப் பெற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தானில் உள்ள இந்திய தூதரகத்தை மூடவும் அதேபோல பாகிஸ்தானுடனான வர்த்தக உறவை முறித்துக்கொள்ளவும் முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் கூடம் தொடங்கி நடைபெற்று வருகிறது. பஹல்காம் தாக்கு தலையடுத்து இதில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என்று தெரிகிறது. அமைச்சர்கள் அமித்ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டுள்ளனர். இதனிடையே தெற்கு காஷ்மீரின் குல்காம் பகுதியில் பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

# யு.பி.எஸ்.சி. தேர்வுகளில் நான் முதல்வன் திட்ட பயனாளிகள் அதிகளவில் வெற்றி

## துணை முதல்வர் உதயநிதி பெருமிதம்

சென்னை, ஏப்.24-

தமிழகத்திலிருந்து யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்றுள்ள அத்தனை பேருக்கும், வாழ்த்தையும், பாராட்டையும் தெரிவித்து மகிழ்வதாக, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழக சட்டப் பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

மத்திய அரசுப்பணிகளை பொறுத்தவரை, 2016-ம் ஆண்டு வரை, தமிழ்நாட்டில் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 100 மாணவர்கள் வெற்றி பெற்று வந்துள்ளார்கள்.

ஆனால், 2016-க்கு பிறகு அந்த எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வந்துள்ளது. குறிப்பாக, 2021-ல், மட்டும் 27 தமிழர்கள் மட்டுமே மத்திய அரசினுடைய குடிமைப் பணிகள் தேர்வில் வெற்றி பெற்றார்கள்.

இந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்ற அந்த ஒரே நோக்கத்தோடு நான் முதல்வன் போட்டித்தேர்வுகள் பிரிவை கடந்த 2023-ம் ஆண்டு நாம் துவங்கினோம்.

இதன்மூலம் யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராகும் 1,000 மாணவர்களுக்கு மதிப்பீட்டுத் தேர்வின் மூலம் 10 மாதங்களுக்கு தலா 7,500 ரூபாயும், மெயின் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு தலா 25,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே, 2023-2024 ஆம் ஆண்டிலேயே, 47 தமிழக மாணவர்கள் யு.பி.எஸ்.சி. தேர்வில் வெற்றி பெற்றார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான், இந்த ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 57 மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். 57 மாணவர்களில் 50 மாணவர்கள் 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் ஊக்கத் தொகை பெற்றவர்கள். அவர்களில் 18 பேர் 'நான் முதல்வன்' உறைவிடப் பயிற்சித் திட்டத்தால் பயன் பெற்றவர்கள் என்பதை இங்கே நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வெற்றி பெறுகிறார்கள் என்ற அந்த வரலாற்றை மீண்டும் நிலைநாட்டுகிற வகையில், 'நான் முதல்வன்' திட்டம் இதே உறுதியோடு செயல்படும் என்று அவர் பேசினார்.

# தீவிரவாதத்தை இரும்புக்கரம்...(1-ம் பக்க தொடர்ச்சி)

உடனடியாக மேற்கொள்ளவும் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

### பத்திரமாக அழைத்து....

இந்த தாக்குதலில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் தேவையான சிகிச்சைகள் வழங்கப்படுவதை உறுதி செய்து பத்திரமாக அழைத்து வர தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. காஷ்மீரில் நடந்துள்ள இந்தத் தாக்குதல் நம் அனைவரது மனச்சாட்சியையும் உலுக்குவதாக அமைந்துள்ளது. 2017-ம் ஆண்டு குல்காமில் அமர்நாத் பயணம் சென்ற மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டார்கள். 2019-ம் ஆண்டு புல்வாமா தாக்குதலில் 40 சிஆர்பிஎஃப் வீரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இதன் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

### 2 நிமி மவுன அஞ்சலி..

மனிதாபிமானமற்ற வகையில் அப்பாவி மக்களின் மீதான இது போன்ற தீவிரவாதத் தாக்குதலுக்கு இந்திய மண்ணில் குறிப்பாக, நமது இந்திய ஜனநாயகத்தில் அறவே இடமில்லை. இதனைக் கண்டிப்பதோடு நமது கடமை முடிந்துவிடவில்லை. இது போன்ற செயல்கள் நடப்பதை அறவே தடுத்தாக வேண்டும். கொடூரமாகக் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும்விதமாக அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மவுன அஞ்சலியைச் செலுத்த கோருகிறேன், என்றார். முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர். பின்னர் அனைத்துக் கட்சியின் சார்பில் உறுப்பினர்கள் தங்களது ஆழ்ந்த இரங்கலையும், கண்டனங்களையும் தெரிவித்து உரையாற்றினர்.

### நிகழாமல் தடுத்திட....

பின்னர் மீண்டும் பேசிய முதல்வர் ஸ்டாலின், "காஷ்மீரில் நடைபெற்ற துயர சம்பவம் குறித்து இந்த அவையில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய வருத்தத்தையும், கண்டனத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நமது நாட்டையே பெரும் துயரத்தில் ஆழ்த்தியிருக்கக்கூடிய இந்தக் கொடூரமான சம்பவத்திலே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இது போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திட மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திட வேண்டுமென்று இந்த அவையின் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய அனைத்து நடவடிக்கைகளை எடுக்கிற நேரத்தில் தமிழ்நாடும், தமிழ் மக்களும் என்றும் துணை நிற்பார்கள் என்று உறுதியை உங்கள் அனைவரின் சார்பிலும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# ஜம்மு-காஷ்மீர் பாரமுல்லாவில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

ராணுவம் அங்கு உஷார்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், பாதுகாப்புப் படையினரால் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதிகளிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல்காமில் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை குறிவைத்து நடத்திய கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஒரு நாள் கழித்து இந்த மோதல் நடந்துள்ளது. பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு, பாதுகாப்புப் படையினர் பிராந்தியத்தின் பல்வேறு பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர். பரபரப்பாக இருந்த சுற்றுலா மையங்களில் உள்ள தெருக்கள் தற்போது வெறிச்சோடி காணப்படுகின்றன.

பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ள பகுதிகளில் கண்காணிப்பு மற்றும் சோதனைகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.



● சென்னை சேப்பாக்கத்தில் வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத்துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




● தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் சார்பில் தொழில் வர்த்தக பொருட்காட்சி மதுரை தமுக்கம் மைதானத்தில் நேற்று சங்க தலைவர் ஜெகதீசன் தலைமையில் மதுரை மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், வடக்கு மண்டல தலைவர் சரவண புவனேஸ்வரி குத்துவிளக்கு ஏற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் நிப்பான் தனுஷ்கோடி செல்வம், பொருட்காட்சி குழு தலைவர் வரதராஜன், செயலாளர் ஸ்ரீதர், ஒருங்கிணைப்பாளர்கள் செந்தில்குமார், சாகித்அலி ஆகியோர் உள்ளனர்.

